விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 12 வெள்ளிக்கிழமை (28.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 314


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## வடக்கு முதலமைச்சரின் பணிப்பையும் மீறி

# அவைத்தலைவர் சீ.வீ.கே எதேச்சதிகாரம்!

- பிரதி அவைத்தலைவர் தெரிவிற்காக
- கல்லறையில்தான் பதவி கிடைக்கும்
- வாராந்த சந்தையாக வடக்கு அமர்வு
- தமிழரசுக் கட்சிக்குள்ளேயே போட்டி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் புதிய பிரதி அவைத்தலைவரை தெரிவு செய்யும் நேற்றைய சபை அமர்வு பெரும் குழப்பங்களுக்கும் கூச்சல்களுக்கும் மத்தியில் நடைபெற்று முடிந்துள்ளது. முதலமைச்சரின் கோரிக்கையை மீறி அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் எதேச்சதிகாரமாக வாக்கெடுப்பை நடத்தி பிரதி அவைத் தலைவரை தெரிவு செய்துள்ளார். வடக்கு மாகாணசபையில் இதுவரை நடைபெற்ற 63 அமர்வுகளில் நேற்றைய அமர்வே முதல் தடவையாக உறுப்பினர் தெரிவுக்கென வாக்கெடுப்புக்கு விடப்பட்டுள்ளது.

(24-ம் பக்.)

## பிரதி அவைத்தலைவராக கமலேஸ்வரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவராக வ.கமலேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாகாண சபையின் அறுபத்து நான்காவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

24 ஆம் பக்கம் பார்க்க...

## மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் நேற்று நாட்டை விட்டு வெளியேறினார்



(கொழும்பு)

மத்திய வங்கித்திறைசேரி பிணை முறி பத்திர முறைகேடு தொடர்பான கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## வற்வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களின் விபரங்கள்

(கொழும்பு)

15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ள வற் வரி திருத்தம் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் 2 வீதமாக காணப்படுகின்ற தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகரிக்கப்படவில்லை.

முன்னதாக, குறித்த வரித்திருத்தங்கள் நேற்றுத் தொடக்கம் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்ட வற் வரி சீர்திருத்த சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அதிக வாக்குக

23 ஆம் பக்கம் பார்க்க....

## குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றியதில் குடும்பஸ்தர் பலி

(கரணவாய்)

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றியதில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8 மணியளவில் புனிதநகர் கற்கோவளத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சின்னக்குட்டி சின்னையா (வயது 65) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார்.

முள்ளியவளையில் மகளுடன் வசித்து வந்த இவர் ஆலய திருவிழா ஒன்றுக்காக கற்கோவளம் பகுதிக்கு மனைவியுடன் வந்து தங்கி நின்றுள்ளார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் வீட்டின் அறையில் உறங்கிக்கொண்டிருந்த வேளை அங்கு வைக்கப்பட்டிருந்த

24 ஆம் பக்கம் பார்க்க...

## முத்தரிப்புத்துறையில் கடற்படை கெடுபிடி; 13 படகுகளுடன் 71 மீனவர்கள் கைது!

(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முத்தரிப்புத்துறை கடற்பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை கடற்தொழிலில் ஈடுபட்டு வந்த 71 உள்ளூர் மீனவர்களை சிலாவத்துறை கடற்படையினர் கைது செய்துள்ளதுடன், அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய 13 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்;

முத்தரிப்புத்துறை கடற்பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை குறித்த மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது காலை 7 மணியளவில் குறித்த மீனவர்களின் படகுகளை கடற்படையினர் கடலில் வைத்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது படகுக்கான காப்புறுதி மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை பரிசீலித்த கடற்படையினர் குறித்த ஆவணங்கள் இல்லாத மீனவர்களை கைது செய்துள்ளனர்.

இதில் சிலாவத்துறையைச் சேர்ந்த 7 மீனவர்களும், வங்காலை

23 ஆம் பக்கம் பார்க்க...

## DISTRICT SECRETARIAT JAFFNA
## INVITATION FOR BIDS

**The Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna on behalf of the Government Agent/ District Secretary, Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the **Reconstruction and Asphalt Surfacing of Ramanathan Road (University of Jaffna road and outer circular connectivity to the Jaffna city region), Improvements of Kalviyankadu- Kokuvil Road (0.160-0.950) (Asphalt Surfacing) Outer ring Road to Jaffna city region** as described below the schedule.

1. Bidding will be conducted through National Competitive bidding Procedure.

2. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of building construction on the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids, Further the registration should be valid at the date of award.

3. Interested bidders may obtain further information from the **Administration Branch, District Secretariat, Jaffna.** And inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 hrs to 3.00 hrs from 28.10.2016**
Contact numbers are: phone :- 021 222 2771

4. A Complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the **Administration Branch, District Secretariat, Jaffna** from **28.10.2016** until **10.11.2016** from **9.00 am** to **2.00pm** upon payment of a non-refundable fee of Rupees **two thousand (Rs 2000/-)**

5. Sealed bids shall be sent by registered post addressed to the **Chairman Procurement Committee, District Secretariat, Jaffna** or deposited in the Tender Box available at the **Government Agent Office, District Secretariat, Jaffna** on or before **2.30 pm on 10.11.2016.** Late bids will be rejected; Bidders should write the job description and bid No, on the top left hand corner of the envelope. Bids will be opened at **3.00 pm at same day** in the presence of the bidders or bidders 'representatives who choose to attend. Original and duplicate should be submitted separately.

6. Procurement committee will keep the right to make final decision in regard to accept or reject Bids will be the final regarding the bids.

7. Bid shall be valid for a period of **90 days** from the last date fixed for receiving of Bids

8. Perbid meeting will be held on **03.11.2016** at **10.00am**

9. The detail of the bid is given below.

| Bid No | Description of work | Estimated amount (million) (Excluding Vat) | Contract Period (months) | Minimum Grade of ICTAD (Highway) | Bids Security (RS) | Non refundable fee (Rs) |
|---|---|---|---|---|---|---|
| JF/ADM/S.P/ R.Road/12/28/ 2016 | Reconstruction and Asphalt Surfacing of Ramanathan Road (University of Jaffna road and outer circular connectivity to the Jaffna city region) | 44.62 | 02 | C5 | 446500.00 | 2000.00 |
| JF/ADM/S.P/ Kal.Kok.Rd/12/ 32/ 2016 | Improvements of Kalviyankadu - Kokuvil Road (0.160 - 0.950) (Asphalt Surfacing) Outer ring road to Jaffna city region | 14.62 | 02 | C6 | 147,000.00 | 2000.00 |

N.Vethanayahan,
Government Agent / District Secretary, Jaffna District.

(C-6290)

## தமிழில் மீளவும் கடித பிரதியினை அனுப்பினார் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலைக்கு உரிய விசாரணை நடத்தக்கோரி பல்கலைக்கழக மாணவர்களால் வட. மாகாண ஆளுநருக்கூடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட மகஜரினை தான் ஜனாதிபதிக்கு அனுப்பியதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அதன் பிரதியை ஆளுநர் றெஜினோல்ட் கூரே பல்கலைக்கழககலைப்பீட மாணவ ஒன்றிய தலைவருக்கு நேற்றையதினம் தமிழில் அனுப்பி வைத்துள்ளதாக கலைப்பீடமாணவ ஒன்றிய தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தனி சிங்கள மொழியில் ஆளுநரால் அனுப்பி வைககப்பட்ட கடித பிரதியினை மாணவர்கள் தமக்கு விளங்கவில்லையெனத் தெரிவத்து திருப்பி அனுப்பியிருந்தனர். இலங்கையில் அரச கரும மொழிகளாக தமிழ், சிங்களம் காணப்படுகின்றன எனத் தெரிவித்து அந்த கடித பிரதி மாணவ பிரதிநிதிகளால் திருப்பி அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே ஆளுநரால் தமிழ் மொழியில் குறித்த கடித பிரதி நேற்றைய தினம் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

### காணி விற்பனைக்கு

A9 வீதி, நுணாவில் சந்தி, மட்டுவில் தெற்கு, துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 3 1/4 பரப்பு வெறும் காணியும்,
நுணாவில் சந்திக்கு அப்பால் ராசா கடை முன் வீதியில் (150m தூரத்தில்) 3 அறை கொண்ட புதிய வீடும் விற்பனைக்கு உண்டு.

**077 8730 129**

(6455)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2017**


மேற்படி கேள்வி அறிவித்தல் நேற்றைய தினம் (27.10.2016) வலம்புரி பத்திரிகையின் 07ஆம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது. இதில் புலோப்பளை உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபாய் 2210000.00 என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ரூபாய் 1315000.00 என திருத்தி வாசிக்கவும்.

செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.


(C-6289)

**தமிழ்மொழி மீதும் பண்டிதர்வீ.பரந்தாமன் அவர்களிடத்தும் பற்றுறுதி கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் அன்பான, நூல் வெளியீட்டு விழா அழைப்பு**

## பண்டிதர் திரு.வீ.பரந்தாமன் அவர்களின்



## தமிழர் உறவுமுறைச் சொல் வழக்கு அகராதி




காலம் :- 2016.10.31 (திங்கட்கிழமை)
நேரம் :- பி.ப 3.30 மணி
இடம் :- கூட்டுறவு மண்டபம், பொது அங்காடி முன்பாக, கிளிநொச்சி.

**தலைமை :- திருவாட்டி பிறேமா மதுரநாயகம்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்-தமிழ்

**முதன்மை விருந்தினர் :-**
**மேன்மை தங்கிய சி.வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர், வட மாகாணம்

**சிறப்பு விருந்தினர் :- மாண்புமிகு சி.சிறீதரன்**
நாடாளுமன்ற உறுப்பினர்-யாழ்.மாவட்டம்

**மாண்புமிகு த. குருகுலராசா**
கல்வி, பண்பாட்டு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அலுவல்கள் அமைச்சு, வட மாகாணம்

**மதிப்புள்ள சு.பசுபதிப்பிள்ளை**
வட மாகாணசபை உறுப்பினர்

**மதிப்புள்ள சு.முருகவேல்**
வலயக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி



**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

நூல் வெளியீட்டுதவி
பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரி.
இல-09, 2ஆம் குறுக்குத்தெரு, கனகபுரம்,
கிளிநொச்சி.

(C-6291)

# ஊழல், மோசடிகள் தொடர்பான கோப் குழுவின் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

**அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

கோப் குழுவின் மற்றுமொரு கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளினதும் இணக்கம் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவித்துள்ள அந்தக் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி இன்று தமது அறிக்கையை சமர்ப்பிக்கவிருப்பதாகக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் இரண்டாம் இலக்க அறையில் கோப் குழு கடந்த திங்கட்கிழமை கூடியது.

மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மோசடி தொடர்பில் அதன் போது வாக்குவாதங்கள் இடம்பெற்றதாகவும், அதனால் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி இடையில் வெளிநடப்பு செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தனது சுயாதீன முயற்சிகளுக்கு அழுத்தம் பிரயோகித்து, இடையூறு விளைவிப்பதாகவும் சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் கோப் குழு கூடியதோடு ஐக்கிய தேசியக் கட்சியினர் தமக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும், பல்வேறு இணக்கங்களுக்கும் உடன்பட்டிருப்பதாகவும் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அத்துடன் இன்னும் 72 மணித்தியாலங்களுக்குள் கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜே.வி.பி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தது.

இந்த நிலையிலேயே அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்ற கோப் குழுவின் அறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## கல்விச் சேவைக் குழுவிற்கு மீண்டும் அதிகாரம் வழங்கல்

கல்விச் சேவையிலுள்ள நியமனங்கள், பதவி உயர்வுகள் போன்ற நடவடிக்கைகளுக்காக கல்விச் சேவைக் குழு மீண்டும் அதிகாரமுள்ளதாக மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி, அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் இருந்த அதிகாரம் இக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி முதல் இந்தக் குழு மீண்டும் செயலுருவம் பெற்றுள்ளது.

இதன்பின்னர் நடைபெறும் சகல கல்வித்துறை நடவடிக்கைகளின் போதும் இக்குழுவை நாடுமாறு கல்விச் சேவை ஆணைக்குழு, கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

இக்குழுவில் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.எம்.என்.டீ. பண்டார தலைவராகவும், செயலாளராக டபிள்யூ.எச்.எச்.டீ.கே. தயாரத்னவும், ஏனைய உறுப்பினர்களாக, ஈ.எச்.எம்.சீ. அல்கடுவவும், எல்.மொஹமட் தம்பி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்திலும் இக்குழு காணப்பட்டிருப்பினும், அதிகாரம் அரச சேவை ஆணைக்குழுவிடம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

## இலங்கை - இந்திய கடல் எல்லையில் இந்தியக் கடற்படையினர் திடீர் ரோந்து

இராமநாதபுரம் மாவட்டம், கடலோரப் பகுதிகளிலிருந்து, முக்கியமாக தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்கு கடல் அட்டை கடத்துவது, அகதிகளை ஏற்றிச் செல்வது, போதைப் பொருட்களை கடத்துவது தொடர்ந்த வண்ணமுள்ளது.

கடத்தல்காரர்களின் இந் நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இந்திய கடற்படையினர், தனுஷ்கோடி, பாம்பன் கடல் பகுதிகளில் உலங்கு வானூர்தியில் நேற்று முன்தினம் முதல் திடீர் ரோந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடத்தல் சம்பவங்களை, இராமேஸ்வரம் பகுதியிலுள்ள சுங்கத்துறையினர், கடலோரக்காவல் படையினர், கடலோரப் பாதுகாப்பு பொலிஸார் உள்ளிட்டோரால் தடுக்க முடியாமலும், மத்திய, மாநில உளவுப்பிரிவு பொலிஸாரும் கண்காணிக்க முடியாமலும் உள்ளனர்.

இந்த நிலையில், கடத்தலைத் தடுப்பதற்காகவும், கடத்தல்காரர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும், பாக்ஜலசந்தி, மன்னார் வளைகுடா கடல் பகுதிகளான இராமேஸ்வரம், தனுஷ்கோடி, மண்டபம், பாம்பனில் இந்திய கடற்படையினர் உலங்கு வானூர்தியில் பல மணி நேரம் ரோந்து வந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-7)

## ஆவா குழுவை கட்டுப்படுத்த புதிய குழு உருவாக்கம்

### ராவணா பலய அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய "ஆவா" குழுவினை கட்டுப்படுத்த தாம் புதிய குழு ஒன்றை உருவாக்கவுள்ளதாக ராவணா பலய அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆவா குழுவின் நடவடிக்கையை கட்டுப்படுத்தவோ, அந்த குழுவின் உறுப்பினர்களை கைது செய்யவோ பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

இந்நிலையில் பொலிஸாரின் நடவடிக்கைகளை தாம் நிறைவேற்றப் போவதாகவும் "ஆவா" குழுவினை கட்டுப்படுத்த புதிய குழு ஒன்றை உருவாக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

## படைத்தரப்பை சேர்ந்த 280பேரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

படைத்தரப்பினைச் சேர்ந்த 280 உத்தியோகத்தர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தவுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிவரும், ஓய்வு பெற்றுக்கொண்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவிகளை வகித்து வரும் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட மொத்தமாக 280 பேர் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளுக்காக, அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களை அனுப்பி வைக்குமாறு இராணுவத்திற்கு புலனாய்வுப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பான பட்டியல் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2008 - 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற லசந்த விக்கிரமதுங்க படுகொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்த இந்த உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னதாக குறித்த அதிகாரிகள் உத்தியோகத்தர்களை புலனாய்வுப்பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கொழும்பு புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த இராணுவப் பெண் சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகளும் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## அர்ஜூன் மகேந்திரன் குற்றவாளி

(கொழும்பு)


மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பான விசாரணைகளின் மூலம் அர்ஜூன் மகேந்திரன் குற்றவாளி என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் பல பில்லியன் பணத்தினை ஊழல் செய்துள்ளமை மேலோட்டமான விசாரணைகளின் மூலமே உறுதி செய்யப்பட்டு விட்டது.

மேலும் பங்குகளை விற்பனை செய்யும் போதும் வட்டிகளை நிர்ணயம் செய்யும் போதும் அர்ஜூன் மகேந்திரன் தன்னிச்சையாக செயற்படும் போதுமே இத்தகைய ஊழல்கள் நடைபெற்றுள்ளன.

முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கும் நிறுவனங்களை தனக்கு சாதகமாக அர்ஜூன் மகேந்திரன் பயன்படுத்திக் கொண்டு அதன் மூலமாக ஊழல்களில் ஈடுபட்டுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



இதேவேளை துறை சார்ந்த நிறுவனங்களுக்கு 30 ஆயிரம் கோடிகள் வரையில் அரசிற்கு கடன்கள் காணப்படுகின்றன.

இதில் குறிப்பிட்ட ஒரு சில நிறுவனங்கள் கடன் தொகையை குறைத்துக் கொண்டுள்ளது.

மேலும் கோப் குழுவின் அறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் போது மேலதிக உண்மைகள் வெளிப்படுத்தப்படும் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## மாணவர் படுகொலையை கண்டித்து
# வடக்கு சபையில் எதிர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் மாணவர்களின் படுகொலைகளுக்கு நீதி கோரியும் நேற்றையதினம் வடக்கு மாகாண சபையில் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தின் போது உறுப்பினர்கள் அனைவரும் தமது இருக்கைகளிலிருந்து எழுந்து அவைத்தலைவருக்கு முன்பாக வந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கொக்குவிலில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடையை சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது 24), கிளிநொச்சி - இரணைமடுப் பகுதியினைச் சேர்ந்த நடராஜா கஜன் (வயது 23) என்னும் இரு இளைஞர்கள் மேற்படிச் சம்பவத்தில் உயிரிழந்திருந்தனர். இதில் உயிரிழந்த மாணவர் ஒருவரின் இடப்பக்க விலாப் பகுதியின் ஊடாக துப்பாக்கி சன்னம் பாய்ந்து அவருடைய நெஞ்சை பிளந்து சென்றுள்ளது என பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவித்திருந்தது.

இதனையடுத்து கொதிப்படைந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சாத்வீக வழியிலான பெரும போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இதன் பின்பாக நீதி கோரி பூரண ஹர்த்தாலும் வடக்கில் இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்றையதினம வடக்கு மாகாண சபையின் அறுபத்து நான்காவது அமர்வு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சபை ஆரம்பமாவதற்கு முன்னதாகவே,

சிவாஜிலிங்கம் மேற்படி படுகொலை தொடர்பில் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென கூறி சபையின் முன்பாக சென்றார். இதன்போது சக உறுப்பினர்களும் முன்பாக சென்று எதிர்ப்பை தெரிவித்தனர். இதன்போது அரச பயங்கரவாதம் தற்போதும் தமிழர்கள் மீது தொடர்ந்து வருகின்றது. யாழ்.பல்கலைககழக மாணவர்கள் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டமையை எந்த சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியாது. அந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட்ட வேண்டும்.

ஆகக்குறைந்தது உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா பத்து மில்லியன் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என சிவாஜிலிங்கம் கூறினார். மேலும் நட்ட ஈடோடு மாணவர்கள் கொல்லப்பட்டது தொடர்பில் அரசியல் தலையீடற்ற நீதியான விசாரணை மேற்கொணடு நீதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என உறுப்பினர் ஆனோல்ட் கோரினார்.

இதன் பின்னர் அவைத்தலைவரின் கோரிக்கைக்கு அமைவாக துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட மாணவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலியும் இடம்பெற்றது. (செ-4)

# போதைப் பொருட்களுடன் 3 இந்.மீனவர்கள் கைது

(மன்னார்)

மன்னார் அரிப்பு பகுதியை அண்மித்த கடற்பரப்பில் ஹேரோயினுடன் மூன்று இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடற்றொழிலில் ஈடுபடும் வகையில் இலங்கை கடற்பரப்புக்குள் வருகை தந்து போதைப் பொருள் வர்த்தகத்தை முன்னெடுத்த குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் இலங்கை கடற்படையினரால கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு தொகை போதைப்பொருட்களையும், சந்தேகநபர்களையும், கொழும்பு போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இந்திய மீனவர்கள் பயணித்த சிறியரக படகொன்றையும் கடற்படையினர் தமது பொறுப்பிற்கு எடுத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதனிடையே, மன்னார் அரிப்பு பகுதியில் கடந்த 18-ஆம் திகதியன்று கடற்படை அதிகாரிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும், போதைப்பொருள் வர்த்தகத்திற்கும் இடையில் தொடர்புள்ளதா என சந்தேகம் எழுந்துள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

போதைப் பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருவதனை தவிர்ப்பதற்கு கடற்படை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தமையை அடுத்து இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (செ-11)

# மாணவர் படுகொலையை கண்டித்து கிழக்கு சபையில் கண்டன தீர்மானம்

(திருகோணமலை)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து கிழக்கு மாகாண சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை இம்மாத அமர்வுக்காக துணை அவைத் தலைவர் பிரசன்னா இந்திரகுமார் தலைமையில் நேற்று வியாழக் கிழமை கூடியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜெ.ஜனார்த்தனன் இப் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் பிரேரணையை சபையில் முன் வைத்தார்.

இப் பிரேரணை மீது மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட், எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமான்லெப்பை ஆகியோரும் உரையாற்றினர்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் இருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். சம்பவம் தொடர்பாக பக்கசார் பற்ற நீதிவிசாரணை நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று அந்த பிரேரணை கூறுகின்றது.

இப்பிரேரணை ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும் என துணை அவைத் தலைவர் பிரசன்னா இந்திரகுமார் அறிவித்தார்.

**மலையகத்திலும் கண்டன போராட்டம்**

இதே வேளை படுகொலையை கண்டித்து மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா மாவட்டம் லிந்துல ஹென்போட் தோட்டத்தில் சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் நடைபெற்றது.

மாணவர்களின் மரணத்திற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட பலரும் முன் வைத்தனர். (செ-11)


31ஆம் நாள் அழைப்பிதழும் நன்றி நவிலலும்

அமரர் மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன்
(பிரதி அவைத்தலைவர் வடமாகாண சபை)

பிறப்பு :- 1948.05.11 இறப்பு :- 2016.10.01



கடந்த 01.10.2016 அன்று இறைபதம் அடைந்த வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவரும் எமது குடும்பத்தின் தலைமகனுமாகிய அமரர் **மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன்** அவர்களின் மறைவுச் செய்தியறிந்து எமது துயரில் பங்குகொண்ட மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர், பொது அமைப்புக்கள், உற்றார் உறவினர் நண்பர்கள், அயலவர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டவர்கள், ஊடக நிறுவனங்கள், இறுதிநாள் அஞ்சலி நிகழ்வு ஏற்பாட்டாளர்கள், கட்சி தொண்டர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அமரர் மரியாம்பிள்ளை **அன்ரனி ஜெயநாதன்** அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி 31.10.2016 அன்று மாலை 4.00 மணிக்கு புனித இராயப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் முல்லைத்தீவு நகரத்தில் அமைந்துள்ள பிரதேச சபை திருமண மண்டபத்தில் நினைவுமலர் வெளியீடும் நினைவுரைகளும் இடம்பெறும். மணற்குடியிருப்பிலுள்ள அன்னாரின் இறுதிச் சடங்குகள் இடம்பெற்ற இல்லத்தில் இடம்பெறும் இராப் போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சந்திக்காக பிரார்த்திக்குமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வழைப்பினை
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு.
077 204 5444 / 071 482 0347

குடும்பத்தினர்

(C-6293)

பல்கலை.மாணவர்கள் படுகொலைக்கு நீதிகோரி

# ஐரோ.பாராளுமன்றம் முன் கவனயீர்ப்புப் போராட்டம்




தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தவும் நீதி வேண்டியும் தமிழீழத்தை அங்கீகரிக்கக்கோரியும் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியில் இருந்து மாலை 5 மணிவரை ஐரோப்பியப் பாராளுமன்றம் முன் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இப் போராட்டத்தில் 20.10.2016 அன்று யாழ்ப்பாணத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுலக்சன், கஜன் ஆகியோரின் படுகொலையைக் கண்டித்தும் நீதி வேண்டியும் சிங்கள பேரினவாத அரச படைகளைத் தமிழீழ நிலப்பரப்பிலிருந்து உடனடியாக வெளியேற்றக் கோரியும் 68 வருடங்களாகத் தொடரும் தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வேண்டியும் தமிழீழ உணர்வாளர்கள் கலந்து கொண்டு தமது கோரிக்கைகளை வெளிப்படுத்தினர்.

ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கைய ளிக்கபட்டது. இறுதியாக தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற எழுச்சி முழக்கத்துடன் போராட்டம் நிறைவுக்கு வந்தது. (இ-7-10)


## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1Kg) மொத்தமாகவும் (ரூ 100) சில்லறையாகவும் (ரூபா110) பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:-

எம்மிடம் குங்குமம், சந்தனம், அபிஷேகக் கூடு, இந்தியன் பட்டு, நெய், பஞ்சவர்ணக்கயிறு மற்றும் கோயிற் சாமான்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சிவா நறுமணப் பூங்கா
இல-288 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி-021 222 2567


# திருடர்களைப் பாதுகாக்கும் நோக்கில் மக்கள் மீது அரசு வரிச்சுமை அதிகரிப்பு

## ஜே.வி.பியின் தலைவர் கடும் விசனம்



கோடிக்கணக்கில் மக்களின் பணத்தை திருடிய, மோசடியாளர் களை பாதுகாத்தவாறு மக்கள் மீது சுமையேற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கையை அனுமதிக்க முடி யாது என எதிர்த்தரப்பு பிரதம கொறடா அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார். அமைச்சர்களுக்கும், பிரதமருக்கும் வாகனம் கொள்வ னவு செய்ய ஒதுக்கியுள்ள நிதியை நிறுத்தினால் வற்வரி தேவை ப்படாது. மனச்சாட்சியுள்ள எவரும் இந்த வரிக்கு ஆதரவாக கைதூக்க மாட்டார்கள் எனவும் அவர் கூறி னார்.

வற்வரி திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்றுமுன் தினம் உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. மேலும் கூறிய தாவது.

இந்த அரசாங்கத்திற்கு வருடத் தில் திரட்ட வேண்டிய வருமானம் குறித்தோ செலவு குறித்தோ மதிப்பிட முடியவில்லை. வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த பின் மார்ச்சில் வரி திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டது. மே மாதத்தில் மீண்டும் வரி திருத் தம் முன்வைக்கப்பட்டது.

மக்களின் பணத்தை சூறையா டும் கொள்ளை கும்பலாக அரசாங் கம் மாறியுள்ளது.

பாரிய கடன் சுமையிருந்தால் அரசாங்கம் ஏன் 30 பேருக்கு பதி லாக அமைச்சர் தொகையை 48 ஆக அதிகரித்தது. மக்கள் மட்டுமா வயி ற்றை கட்டிக்கொள்ள வேண்டும்? ஆட்சியாளர்கள் வயிற்றை கட்டிக் கொள்ளத் தேவையில்லையா?

அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்வதற்காக 118 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதமருக்கு வாகனம் கொள்வனவு செய்வதற்காக 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை நிறுத்தினால் வற்வரி தேவைப்படாது. வற் உயர்வினூடாக அரசாங்கம் 180 கோடி ரூபா திரட்ட எதிர்பார்க்கிறது.

சொத்துக்களை விற்று நோயா ளிகளை இருதய சத்திர சிகிச்சை செய்கின்றனர். இதற்கும் வரியை அதிகரித்து மனிதாபமின்றி ஆட்சியா ளர்கள் சொகுசு வாழ்வு வாழ்கின் றனர்.

வீண் விரயம், திருட்டு என்பவ ற்றை நிறுத்துவதாக அரசாங்கம் கூறி யது. கடந்த ஆட்சியில் திருடியவர்க ளிடம் இருந்து பணத்தை அறவிடு வதாக உறுதியளிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 01 1960

உதிர்வு 25 10 2016



திதி-28.10.2016 திரயோதசி

அமரர் கந்தப்பு தவராசா (பாவா)

(சந்தை குத்தகையாளர்)

சிரித்த முகத்துடனே
வெள் சொல் அறியாத
எம் அன்புத் தந்தையே
உள்ளம் நெகிழ்ந்துருகி
வேண்டுகின்றோம் இறைவனிடம்
தங்கள் ஆத்மா சாந்திக்காக

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

நினைவுத்துயரில்
மனைவி, மக்கள்.


## இராசி பலன்

28.10.2016
(ஐப்பசி 12, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 7.32 மணிவரை
அத்தம் முழுவதும்
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
பிரதோச விரதம், அமர்தம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி | | |
| செவ் | | | ராகு |
| | சனி சுக் | சூரி புத | குரு சந் |

**மீனம்:** ஆன்மீக சிந்தனை மேலோங் கும் நாள், உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெறு வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்:** கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்ல வர்களின் அறிவுரையும் ஆதர வும் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**இடபம்:** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள், கல்யாணக் கன வுகள் நனவாகலாம், வழிபாட் டால் நிம்மதி காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** பொதுக் காரியங்களில் நாட் டம் காட்டுவீர்கள், தொலை பேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் கூடும், நிதானத்து டன் செயற்பட்டு முன்னேற்றம் பெற வேண்டிய நாள், பிர யாண பயமுண்டு.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், பொது நல ஈடுபாட்டால் புகழ்பெறு வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், காரிய அனு கூலமுண்டு.

**மகரம்:** ஏட்டிக்கு போட்டியாகச் செய ற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதுகலம் காண வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி ஏற்படலாம்.

**சிம்மம்:** இறை வழிபாட்டால் இன்பங் கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர் வம் காட்டுவீர்கள், பேச்சில் இனிமை பிறக்கும், சான்றோர் களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், வரம் தரும் தெய் வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், ஆரோக்கிய மான நாள்.

**விருச்சிகம்:** சகோதர வழி ஒத்துழைப் புக்கள் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் கேட் கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒருசில வேலைகளுக்காக நீண் டநேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம், கடவுளை வழி பட்டு பயன்பெற வேண்டிய நாள்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண் டிய நாள், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கள் அகலும், தொலைபேசித் தகவல் நிம்மதி தரும் வகை யில் அமையும்.

# யாழில் 3000 தொட்டிகளை அமைக்கவுள்ளது இந்தியா

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணக்குடாநாட்டில் மழை நீரைச்சேகரிக்கும் 3000 நீர்த்தாங்கித்தொட்டிகளை அமைப்பதற்கு இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்படவுள்ளது.**

இதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளது.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் நிலையான குடிநீர் ஆதாரத்தை வழங்கும் திட்ட முன்மொழிவு ஒன்றை, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான பணியகம், இந்தியத் தூதரகத்திடம் கையளித்திருந்தது.



இந்த திட்ட முன்மொழிவின் அடிப்படையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைப்பதற்கு 300 மில்லியன் ரூபாவை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இது தொடர்பாக இந்திய- இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் விரைவில் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படவுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் ஒப்புதலைக் கோரும் பத்திரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்திருந்தார்.

அந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. (இ-7-10)

## யுத்த காயங்களினால் உடலில் உலோகத்துண்டுகளுடன் உள்ள மக்களுக்கான வைத்திய சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட காயங்களினால் இன்னமும் பலர் உடலில் உலோகத்துண்டுடன் இருப்பதாக நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டமையைத் தொடர்ந்து பிரதமரால் இந்நோயாளர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் தேவையான வைத்திய சிகிச்சை வழங்கப்படும் என நாடாளுமன்றில் உறுதியளிக்கப்பட்டது.

இதற்கமைவாக இந் நோயாளர்களை பரிசோதித்து உரிய சிகிச்சைகளை வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலைக்கும் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வைத்திய சிகிச்சை பெற விரும்பும் நோயாளர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைகளை அணுகி தமக்குரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளலாம் என வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (இ)

## மாநகர சபையின் விசேட அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் உள்ள 23 மாநகர சபைகளின் பரிபாலனத்துக்குட்பட்ட பகுதியில் மாநகர திண்மக் கழிவகற்றல் தொடர்பான முக்கிய முன்னெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது. அம் முன்னெடுப்பில் மாநகர சபை எல்லைக்குள் அனைத்துத் திண்மக்கழிவுகளையும் சிறப்பாக முகாமைத்துவம் செய்யும் நோக்குடனும் அதன்மூலம் சுற்றுச் சூழலை மேம்படுத்தி எமக்கும் இனி வரும் தலைமுறையினருக்கும் சிறந்த ஒரு சுகாதாரமான வாழ்வை ஏற்படுத்தவும் நாம் எல்லோரும் இணைந்து முயற்சி ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறோம். அதற்கு அனைத்துப் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வீடுகள், கடைகள், தேநீர்ச் சாலைகள் , உணவு விடுதிகள், ஆலயங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள், தனியார்நிறுவனங்கள், வைத்தியசாலைகள், தொழிற்சாலை கள் மற்றும் பொது இடங்களில் சேரும் திண்மக்கழிவுகளை தரம் பிரித்து பிளாஸ்ரிக் , பொலித்தீன், காட்போட், கண்ணாடி , பழுதடைந்த இலத்திரனியல் சாதனங்கள் இவை அனைத்தையும் வேறாகவும் உக்கக் கூடிய கழிவுகள் வேறாகவும் யாழ். மாநகர சபையின் கழிவகற்றும் வாகனம் சேகரிக்க வரும் பொழுது அவற்றைத் தந்துதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம். அவ்வாறு தாங்கள் தரும் பட்சத்தில் அதனைக் கொண்டு தாங்கள் ஒரு சிறந்த மாநகர திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்குச் சிறப்பாகப் பங்களிப்புச் செய்யமுடியும். அவ்வாறு செய்வதன் மூலம் தாங்களும் நாங்களும் இனிவரும் தலைமுறையினருக்கு சிறந்த ஒரு சுகாதாரமான வாழ்வை வழங்க முடியும் என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

இந்தநடைமுறைகள்யாவும் கார்த்திகை மாதம் முதலாம் திகதியிலிருந்து மிக முக்கியமாகவும் இறுக்கமாகவும் பின்பற்றப்படும் என்பதோடு தரம் பிரிக்கப்படாத திண்மக்கழிவுகள் மாநகர சபையினால் சேகரிக்கப்படாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம் என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் பொ. வாகீசன் அறிவித்துள்ளார். (இ-10)

## ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 6.30 முதல் 7.30 மணிவரை ஆன்மீக அருளுரை நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை "கந்தபுராண அரங்கேற்றம்" எனும் தலைப்பின் கீழ் ஆன்மீக அருளுரை நடத்தப்படவுள்ளது. (இ-7-10)

## பொதுமக்கள் கோரிக்கை

கொடிகாமம் பேருந்து நிலையப் பகுதியிலுள்ள மலசலகூடத்தினை இருபத்து நான்கு மணித்தியாலங்களும் திறக்குமாறு பொதுமக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி திறக்கப்பட்டதனையடுத்து இவ்வீதியால் இருபத்து நான்கு மணி நேரமும் பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் வெளியூர்களில் இருந்து வரும் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கொடிகாமம் நகரில் இறங்கி வேறு பேருந்துக்களில் ஏறுவது வழமை.

இதன்காரணமாக அங்கு மலசலகூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பிரதேச சபையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் இம் மலசலகூடம் காலையில் இருந்து மாலை வரையே திறக்கப்பட்டிருக்கும்.

மாலை 6 மணிக்கு பின்னர் வெளியிடங்களில் இருந்து வரும் பயணிகள் மலசலகூடம் பூட்டப்பட்டிருப்பதனால் அயலில் உள்ள வீடுகளிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இரவு நேரங்களிலும் பெருமளவு பயணிக்கள் கொடிகாமம் பேருந்து நிலையப் பகுதியைப் பயன்படுத்துவதனால் இம் மலசலகூடத்தினை இருபத்து நான்கு மணித்தியாலங்களும் திறக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த மலசலகூடம் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாகவும் பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-60)

## கோவா பயிர்ச்செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம்

வலிகாமம் பகுதியில் மரக்கறிப் பயிர்ச் செய்கையான பெரும்போகக் கோவாச் செய்கையில் விவசாயிகள் தற்போது அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி, கட்டுவன், அச்செழு, ஊரெழு, உரும்பிராய், நீர்வேலி, கோப்பாய் உள்ளிட்ட பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான விவசாய நிலப்பரப்பில் கோவாச் செய்கை தற்போது நடைபெற்று வருகிறது.

கடந்த செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கோவாச் செய்கை இரண்டரை மாத காலத்தில் அறுவடை செய்யப்படவுள்ளது. கோவாச் செய்கையின் அதிகரித்த விளைச்சல் காரணமாகக் கடந்த வருடம் தம்மால் அதிக இலாபம் பெற முடிந்ததாக வலிகாமம் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.



கடந்த 10 வருட காலமாக கோவா பயிர்ச்செய்கையில் இப்பகுதியில் ஈடுபட்டு வருகிறோம். இப்பயிர்ச்செய்கையால் நல்ல வருமானத்தை பெற்றுக்கொளளவும் முடியும். ஆனால் சில வேளைகளில் பாதிப்பு ஏற்பட்டும் உள்ளது. இந்த வருடம் மொத்தமாகப் பதினெட்டுப் பரப்பில் 4 ஆயிரத்து 500 கன்றுகள் பயிரிட்டுள்ளேன்.

கடந்த வருடம் கோவா அமோக விளைச்சலைப் பெற்றுத் தந்தது. ஒரு கிலோ கோவா-120 ரூபா வரை விற்கப்பட்டமையால் நல்ல இலாபத்தையும் பெறக் கூடியதாகவிருந்தது.

தொடர் மழை ஏற்பட்டு அதிக வெள்ளம் தேங்கி நின்றால் கோவா அழுகி அழிவடையும் நிலை ஏற்படும். அவ்வாறானதொரு நிலை ஏற்படக்கூடாது என்பதே எமது பிரார்த்தனை என கோவா பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயி ஒருவர் தெரிவித்தார். (இ-9)

## பரிசளிப்பு விழா

நீர்வேலி சுடர் கல்வி நிறுவனத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவுப் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நிறுவன வளாகத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியரும் நிறுவன இயக்குநருமாகிய நா.சசிகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும் சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை அதிபர் சி.தர்மரட்ணம், லைபறா அமைப்பின் இணைப்பாளர் பே.றொனி ஆகியோரும் கலந்து கொளளவுள்ளனர். (இ-7-10)

## மணிவிழா

தென்மராட்சியின் சமூகப் பணியாளர் கா.சிவஞானசுந்தரத்தின் மணிவிழாவும் அவரது மணிவிழாவை ஒட்டி வெளியிடப்படும் மாண்புறு மட்டுவில் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வும் நாளை மறுதினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். (இ-7-10)

# ராஜபக்ஷ ஒருவரை சிறைக்கு அனுப்ப விரைவாகத் தீர்மானம் எடுப்பார்கள்

## கோத்தபாய ராஜபக்ஷ விசனம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்காக சில தீர்மானங்களை தயக்கமின்றி எடுத்ததாகவும் எனினும் தற்போது அவ்வாறான தீர்மானங்கள் எடுப்பதாக தென்படவில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். எவ்வாறாயினும் ராஜபக்ஷ ஒருவரை சிறைக்கு அனுப்புவதென்றால் அரசாங்கம் விரைவாக தீர்மானம் எடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.**



இதன் காரணமாக இருவரில் ஒருவரே நாட்டை நிர்வகிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி கூட தெரிவித்திருப்பதாக அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்த கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இவ்வாறான நிலை காரணமாக சமூக ஊடகங்கள் வாயிலாக தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் விசாரணைகள் மேற்கொள்ளும் நிறுவனங்கள் அரசியல் தேவைப்படி செயற்படுவதை ஜனாதிபதி விளங்கிக் கொண்டு உரையாற்றியிருப்பதை தான் வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

யுத்தத்தாலும் குப்பைகளாலும் அசுத்தமடைந்திருந்த கொழும்பு நகரத்தை மிகவும் குறுகிய காலத்தில் உலகில் வேகமாக வளர்ச்சியடையும் நகரமாக மாற்றியதாகவும் அந்த வேலைத்திட்டங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் இரவு - பகலாக உழைத்ததாகவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## மாடு குறுக்கே வந்ததால் பனை மரத்தில் மோதிய குடும்பஸ்தர் படுகாயம்

வீதியால் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மாடு குறுக்கே பாய்ந்ததில் பனைமரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார். குறித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் ஏ-9 வீதியில் பூநகரி பாலத்தடியில் இடம்பெற்றது.

இவ்விபத்தில் வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த பி.ஜெயரட்ணம் (வயது-57) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார். வவுனியாவிலிருந்து பூநகரி நோக்கி மரணச் சடங்கு ஒன்றிற்குச் சென்று கொண்டிருந்த போது பூநகரி பாலத்தடியில் மாடு ஒன்று குறுக்கே வந்ததில் பிரஸ்தாப குடும்பஸ்தர் அருகிலிருந்த பனை மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3-30)

## வளவாளர்கள் விண்ணப்பிக்கலாம்

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் தற்காலிகமாக இயங்கிவரும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும் நாடகமும் அரங்கியலும் இசைக்கருவிகள், சிங்களமொழி மற்றும் ஆங்கிலமொழி ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே குறித்த பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய இப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வளவாளர்கள் (ஆசிரியர்கள்) தங்களது சுய விபரங்களை 15.11.2016 ஆம் திகதிக்குமுன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், குடமியன், வரணி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் ஏ.சாந்தசீலன் அறிவித்துள்ளார். (இ-3)

## காணிகள் ஏலம் விடுதல்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானம் ஆலய வயற்காணிக்குரிய பங்குகள் ஏலம் விடுதல் 2016, 2017 காலபோகம் கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான மருதநகர் பெரிய பரந்தன் பகுதியில் அமைந்துள்ள இருபது அரை ஏக்கர் வயற்காணிகள் காலபோகச் செய்கைக்காக ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது என்பதனை அனைத்து விவசாயிகளுக்கும் அறியத்தருகின்றோம். திகதி 2016.10.29 சனிக்கிழமை, இடம் ஆலய மண்டபம், நேரம் மு.ப. 10.00மணி. ஆலய பங்குகளை கொள்வனவு செய்வோர் அன்றைய தினமே முழுத்தொகையையும் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆலய பரிபாலன சபை
077 605 9577

(சி-6283)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc, MSc பொறியியலாளர் குடிசார்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/6379 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma in English (HNDE) ஆசிரியர் (அரச)<br>தொ.இ: G/6397 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 87.5 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/L கட்டார்<br>தொ.இ: B/6380 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6400 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: GS (அரச) ஸ்கொட்லாந்து<br>எதிர்பார்ப்பு: Eng CIMA உள்நாடு or வெளிநாடு<br>தொ.இ: B/6381 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 52.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L முகாமைத்துவ உதவியாளர் (அரச)<br>தொ.இ: G/4482 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 13.75<br>தகைமை/தொழில்: நகைத் தொழில் (O/L)<br>தொ.இ: B/6385 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 85.25 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:A/L தொழில்நுட்ப உதவியாளர் (அரச)<br>தொ.இ: G/4312 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 7201005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)



எமது கல்லூரி மாணவியான செல்வி.ஆரணி சிவகுமார் 19 வயதுப்பிரிவில் நீளம் பாய்தல் நிகழ்வில் 5.26 மீற்றர் நீளம் பாய்ந்து தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தை வகித்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவர் மேலும் மேலும் உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

### புலமைப்பரிசில் பரீட்சை- 2016 சித்தியடைந்தோர்



P. Janusika Marks 168 | B.Kajena Marks 162 | S.Sanathany Marks 160 | J.Thesha Marks 160 | J.Thinesha Marks 159 | P.Abisca Marks 159 | S.Dharunika Marks 158 | A.Ragavi Marks 157



S.Lijanika Marks 156 | P.Thushani Marks 156 | M.Kajaluxsy Marks 154

மேற்படி எமது கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 11 மாணவர்களையும் அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 26 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**வாழ்த்துவோர் :- பழைய மாணவர் சங்கம்** (சி-6282)

## நீவில் பிரதேச பற்றைக் காட்டிலிருந்து உருக்குலைந்த மனித எலும்புக்கூடு மீட்பு



(மல்லாவி)

கிளிநொச்சி உருத்திரபுரம் நீவில் பிரதேசத்தில் பற்றைக்காட்டிலிருந்து மனித எலும்புக்கூடு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சடலமொன்று குறித்த காட்டுப்பகுதியில் கிடப்பது தொடர்பில் பொலிஸாருக்கு நபர் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் சடலத்தினை நேற்று மீட்டுள்ளனர். குறித்த பகுதி பற்றைக்காடாக காணப்படுவதுடன், ஆள்நடமாட்டம் அற்ற பகுதியாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் சடலம் உருக்குலைந்து எலும்புக்கூடாக காணப்படுகின்றமையால் உயிரிழந்தவர் தொடர்பில் அடையாளம் காண முடியாதுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15)




## மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துங்கள்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஜனாதிபதி, முதலமைச்சர் ஆகியோருக்கு கடிதம்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட தீர்மான த்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதி, பிரதமர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை அனுப்பி வைத்த அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 24 ஆம் திகதி அன்று நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பொருளாதார மத்திய நிலையத்தை 2010 ஆம் ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவில் தீர்மானிக்கப்பட்ட ஓமந்தையில் உள்ள 20 ஏக்கர் காணியில் அமைக்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், எஸ்.சிவமோகன் ஆகியோரும் அன்றைய தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவும் எழுத்து மூலம் தனது சம்மதத்தைத் தெரிவித்திருந்தார்.

இவர்களுடன் வவுனியா மாவட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், ஜீ.ரி.லிங்கநாதன், தியாகராசா, மயூரன் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொள்ளாதபோதும் மாகாண சபை உறுப்பினர் இ. இந்திரராசாவும் தனது சம்மதத்தை எழுத்து மூலம் தெரிவித்திருந்தார். இவர்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் அன்றைய கூட்டத்தில் மதவு வைத்தகுளத்தில் ஒதுக்கப்பட்ட காணி போதியதாக இல்லாததை சுட்டிக்காட்டியதோடு ஓமந்தையில் அமைவதை அவர் எதிர்க்கவில்லை.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் 2010.06.15 ஆம் திகதியிலும் 2016.10.24 ஆம் திகதியிலும் எடுத்த தீர்மானத்தின் படியும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் வாக் கெடுப்பின் படியும், பெரும்பாலான விவசாயிகள், பொது அமைப்புக்கள், பொருளாதார நிபுணர்கள், பேராசியர்களின் விருப்பமும் ஓமந்தையாக விருப்பதால் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்ட தீர் மானத்தை அமுல்படுத்த சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு பணிப்புரை வழங்கும்படி கோரியுள்ளார்.

அதேவேளை, ஆட்சி மாற்றத்திற்குப் பிற்பாடு எமது மக்களின் இந்த சிறிய கோரிக்கையைக் கூட கடந்த பல மாதங்களாக மத்திய அரசு, மக்கள் பிரதிநிதிகள் விரும்பும் இடத்தில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க அனுமதி வழங்கவில்லை என கடுமையான அழுத்தங்களை எமக்கு தந்துள்ள அதேவேளை, புதிய நல்லாட்சி அரசாங்கம் மீதும் நம்பிக்கையிழந்து வருகின்றனர் என்பதையும் தாங்கள் கவனத்தில் எடுத்து செயற்படும்படி கேட்டுக் கொள்கின்றேன் எனவும் அதில் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

## கடற்படை மீது தாக்குதல் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

முத்தரிப்புத்துறை பகுதியில் கடற்படை சிப்பாய்கள் மீது கடந்த 18 ஆம் திகதி இரவு தாக்குதல்களை மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 6 சந்தேக நபர்கள் உட்பட 9 பேரை மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா நேற்று வியாழக்கிழமை பிணையில் செல்ல அனுமதித்துள்ளதாக சட்டத்தரணி எஸ்.ஜெபநேசன் லோகு தெரிவித்துள்ளார்.

குறித்த 6 சந்தேக நபர்களும் நேற்று மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜாவின் உத்தரவிற்கு அமைவாக அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டனர்.

மன்றில் ஆஜரான 5 சாட்சியங்களை வைத்து குறித்த அடையாள அணிவகுப்பு நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட வேண்டும் என மன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டமைக்கு அமைவாக அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. மீண்டும் ஒரு சாட்சிக்காக அடையாள அணிவகுப்பு நடத்தப்பட வேண்டும் என்று மன்றில் தெரிவித்த ஆட்சேபனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னராக அடையாள அணிவகுப்பு மீண்டும் நடத்த முடியாது என்று நீதவான் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களுடன் மேலும் 3 சந்தேக நபர்கள் திறந்த நீதிமன்றில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டு மொத்தம் 9 சந்தேக நபர்கள் தொடர்பில் பிணை விண்ணப்பம் செய்து அதன் அடிப்படையில் ஒவ்வொரு சந்தேக நபர்களும் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக் கப்பட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் குறித்த 9 சந்தேக நபர்களும் சிலாபத்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கையொப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளது என சட்டத்தரணி எஸ். ஜெபநேசன் லோகு மேலும் தெரிவித்தார். (2-9)

## சமுர்த்தி நிவாரண உதவிக் கொடுப்பனவிற்கு 6 ஆயிரத்து 848 குடும்பங்கள் தெரிவு

### அனுமதிக்காக காத்திருக்கின்றோம் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் ஆயிரத்து 441 குடும்பங்களுக்கு மட்டுமே சமுர்த்தி நிவாரண உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. மிகுதியாகவுள்ள 13 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்தி நிவாரண உதவிக் கொடுப்பனவிற்காக 6 ஆயிரத்து 848 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவை வழங்கப்படுவதற்குரிய அனுமதியை எதிர்பார்த்து இருப்பதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தம் காரணமாகப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இங்குள்ள குடும்பங்களில் அநேகமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் மட்டுமே சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வள்ளுவர்புரம் 238, மன்னாகண்டல் 159, விசுவமடு கிழக்கு 224, விசுமடு மேற்கு 281, மாணிக்கபுரம் 262, தேராவில் 277 எனமொத்தம் ஆயிரத்து 441 குடும்பங்களுக்கு மட்டும் உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை 13 கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி நிவாரண உதவிக் கொடுப்பனவுக்காக 6 ஆயிரத்து 248 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆயினும் இதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை எனவும் கிடைக்கப் பெறும் பட்சத்தில் அக் குடும்பங்களுக்கான சமுர்த்தி நிவாரண உதவி கொடுப்பனவு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## ஆனையிறவு புகையிரத நிலையம் இன்று திறந்து வைக்கப்படும்

(பரந்தன்)

அரச போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "வடக்கு புகையிரத வீதியை மக்களின் உதவியினால் கட்டியெழுப்பபடும் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களின் சேமிப்பு மற்றும் அர்ப்பணிப்பும் நன்கொடையாக வழங்கப்பட்டதனை இரண்டு ரூபாய் நிதியும் அவர்களினால் மேற்கொள்ளப்படும் தேசிய நற்பணியினை ஊக்குவிக்கும் பொருட்டு ஆசிரியர்களினால் வழங்கப்பட்டதனை பத்து ரூபா நன்கொடையினையும் சேர்த்து கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் அனைவரின் பங்களிப்புடன் மீள கட்டி எழுப்பப்பட்ட ஆனையிறவு புகையிரத நிலையம் இன்று வெள்ளிக்கிழமை கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ். இராதாகிருஷ்ணன், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஆகியோரினால் திறந்து வைக்கப்படவுள்ளது.



அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு ஆனையிறவு புகையிரத நிலையம் திறப்பதற்கு தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-312)

## டிப்பர் வாகனங்கள் நேற்று அடுத்தடுத்து மோதி விபத்து

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்காவில் ஒலிபரப்பு கோபுரத்திற்கும் பழைய முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியிலுள்ள 18 ஆம் போர் எனும் இடத்தில் வீதியை கடக்க முற்பட்ட டிப்பர் வாகனத்துடன் மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த வேறு இரண்டு டிப்பர் வாகனங்கள் அடுத்தடுத்து மோதியதன் காரணமாக ஒரு டிப்பர் வாகனம் தடம்புரண்டதுடன் ஏனைய வாகனங்களும் பலத்த சேதத்திற்குள்ளாகின.




இவ்விடத்தில் தடம்புரண்ட டிப்பர் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் பொது மக்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் நேற்று அதிகாலை 2 மணிக்கும் 5 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் விபத்துக்குள்ளான டிப்பர் வாகனங்களை மாங்குளம் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன் தடைப்பட்டிருந்த ஏ-9 வீதி போக்குவரத்தையும் சீர்செய்தனர். (2-15)

# 22 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் தோட்டக்கிணறுகள் அமைப்பதற்கு பத்து குடும்பங்களுக்கு நிதியுதவி

## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான செயலகத்தின் 22 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாய நிலமுள்ள 10 குடும்பங்களுக்கு தோட்டக் கிணறுகள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களைத் தெரிவு செய்து அக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்குடன் விவசாயம் செய்யக்கூடிய காணி வசதியுள்ள 10 குடும்பங்களுக்கு தலா இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியுதவி தோட்டக் கிணறுகள் அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாள்புரம், விநாயகபுரம், பாலைப்பாணி, கொல்லர் விளான்குளம், செல்வபுரம், பூவரசன்குளம், பாலிநகர், சிராட்டிகுளம், பாண்டியன்குளம், வன்னிவிளாங்குளம் என 10 கிராமங்களில் இருந்து தலா ஒரு பயனாளி குடும்பம் என மொத்தம் 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

வன்னி வலம்

# உருத்திரபுரத்தில் வயல்விழா



(சிவநகர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் யு.டி.பி. அனுசரணையுடனான வயல் விழா நடைபெற்றது.

விவசாயி ஒருவருக்கு விவசாயத் திணைக்களத்தால் கத்தரி, வெண்டி, தக்காளி ஆகிய பயிர்களின் பல தரப்பட்ட இனங்கள் முன்மாதிரி செய்கைக்காக வழங்கப்பட்டிருந்தன.

இவற்றினது சிறப்பியல்புகளை இனம் காணும் வகையிலும் அவற்றின் அறுவடை தொடர்பிலுமான வயல் விழா கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவனேசன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மேலதிக பணிப்பாளர் க.கலாநிதி எஸ்.கே.அரசகேசரி மற்றும் பண்ணை முகாமையாளர், விவசாய விரிவாக்க அலுவலர், விவசாயப் போதனாசிரியர், பெருமளவிலான விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலதரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (2-254)

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வைர விழா நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எம்.எஸ். ரம்சீன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)






# பண்டாரவன்னியன் சிலை நிறுவுதல்; ஆட்சேபனை இருப்பின் அறியத் தருக!

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு முன்னால் அமைந்துள்ள வீதிச்சுற்றுவட்டத்தில் பண்டாரவன்னியன் சிலை நிறுவுவதற்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் விடத்தில் இச் சிலையை நிறுவுதல் தொடர்பாக பொது மக்களிடம் ஆட்சேபனை ஏதும் இருப்பின் 12.11.2016 ஆம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (2

# சிறுவனைக் காணவில்லையென வவுனியா பொலிஸில் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா, வெள்ளிகோட்டம் சிதம்பரபுரத்தை சேர்ந்த நடராஜா நயனகுமார் (சூட்டி மாத்தையா) என்ற 17 வயதுடைய விசேட தேவையுடைய சிறுவனை காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி அயல் வீட்டாருடன் பழைய டயர்களை கொள்வனவு செய்வதற்காக வாகனமொன்றில் சென்ற பிரஸ்தாப சிறுவனை 11.30 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்து ஒன்றில் வவுனியா நோக்கி செல்வதற்கு குறித்த சிறுவனை கூட்டிச் சென்றவர்கள் ஏற்றி விட்டதாகவும் எனினும் குறித்த சிறுவன் வவுனியா நகரை வந்தடையவில்லை எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கோமரசன்குளம் பாடசாலையில் கல்வி கற்கும் குறித்த சிறுவன் தாய், தந்தை இல்லாத நிலையில் தமது அம்மம்மாவுடன் தங்கி கல்வி கற்று வந்ததாக உறவினர்கள் தெரிவிப்பதுடன் இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இந் நிலையில் இச் சிறுவனை கண்டவர்கள் 077 292 3135, 077 892 3272 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் அத்துடன் துண்டுப்பிரசுரமும் வவுனியா நகரில் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# முத்தரிப்புத்துறை கிராம மீனவர்கள் 14 பேர் கடற்படையினரால் கைது

## அச்சத்தில் மக்கள்

(மன்னார்)

முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட முத்தரிப்புத்துறை கிராம மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லும் நிலையில் தொடர்ச்சியாக கடற்படையினரின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், கடலில் இருந்து கரை திரும்பும் வரை அச்சத்தின் மத்தியிலேயே இருப்பதாகவும் முத்தரிப்புத்துறை மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் வழமை போல் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை கடற்றொழிலுக்குச் சென்றுள்ளனர்.

இதன் போது கடல் பாதுகாப்பில் ஈடுபட்ட முத்தரிப்புத்துறை கடற்படையினர் மீனவர்களின் படகுகளை கடலில் வைத்து சோதனையிட்டதோடு, படகுகளின் ஆவணங்களையும் சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது முத்தரிப்புத்துறை மீனவர்களின் 7 படகுகளையும் குறித்த படகில் மீன்பிடியில் ஈடுபட்ட 14 மீனவர்களையும் கைது செய்த கடற்படையினர் முத்தரிப்புத்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பின்னர் விசாரணைகளை மேற்கொண்ட கடற்படையினர் படகுகள் மற்றும் மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ததோடு, ஒரு மீனவரை தடுத்து வைத்து விசாரணை செய்த பின் விடுதலை செய்துள்ளனர்.

இதனால் முத்தரிப்புத்துறை கிராம மீனவர்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளதோடு மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சப்படுவதாகவும் முத்தரிப்புத்துறை கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு முத்தரிப்புத்துறை கிராமத்தில் உள்ள வீடு ஒன்றினுள் செல்ல முற்பட்ட ஒருவரை மக்கள் பிடித்து தாக்கிய போது தாக்குதலுக்கு உள்ளான நபர் கடற்படைச் சிப்பாய் என தெரிய வந்த நிலையில் கடற்படையினருக்கும், முத்தரிப்புத்துறை கிராம மக்களுக்கும் இடையில் முறுகள் நிலை ஏற்பட்டது.

இதன் போது தாக்குதல்களுக்கு உள்ளான கடற்படை சிப்பாய்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் கடற்படை சிப்பாய்களை தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டு நேற்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக பலர் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில் முத்தரிப்புத்துறை கிராம மக்கள் உள்ள நிலையில் கடற்றொழிலுக்குச் செல்லும் குறித்த கிராம மீனவர்கள் மீது கடற்படையினர் தொடர்ந்தும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றமை முத்தரிப்புத்துறை கிராம மீனவர்களின் குடும்பங்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# கணித நாடகப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு



முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட மு/முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய ரீதியில் நடைபெற்ற கணித நாடகப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் நான்கு சிறப்பு விருதுகளைப் பெற்றமைக்காகவும் மற்றும் மாகாண மட்டப் ரீதியில் நடைபெற்ற இசை நாடகப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றமைக்காகவும் அப் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் நெறிப்படுத்திய ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் ஞா.ஜெபநேசன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது வெற்றியீட்டிய மாணவர்கள், நெறிப்படுத்திய ஆசிரியர்கள் முல்லைத்தீவு நகரப் பகுதியில் இருந்து பாண்ட் வாத்திய இசை அணியுடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களினால் அழைத்து வரப்பட்டனர்.

இந் நிகழ்வின் போது கணித நாடகப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாமிடத்தை பெற்றமைக்காகவும் சிறந்த இசையமைப்பு, சிறந்த நாடகப் பிரதியாக்கம், சிறந்த நெறி யாள்கை, சிறந்த நாடக முழுமையாக்கம் என நான்கு விருதுகளைப் பெற்ற மாணவர்களையும் இசை நாடகப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற மாணவர்களையும் கௌரவித்து சிறப்பித்துள்ளனர். (2-15)

# சமூக மேம்பாட்டில் நூலகங்களின் பங்களிப்பு




**தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

'கற்கை நன்றே கற்கை நன்றே'

'பிச்சை புகினும் கற்கை நன்றே'

சமூக மக்கள் அனைவருக்கும் பொதுவான சேவை ஆற்றுவதில் பொது நூலகங்கள் பிரதான அங்கம் வகிக்கின்றன.

"அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலிலும் சிறந்தது அங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது" என்பதற்கிணங்க பொது நூலகங்கள் சிறியோர், முதியோர், ஏழை, பணக்காரர், ஆண், பெண், படித்தவர், படிக்காதவர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் எது வித எதிர்பார்ப்புமின்றி சேவையாற்றுகின்றன.

நூலகங்களுடைய ஆரம்பகால வரலாறு மனித நாகரிக வளர்ச்சியோடு பிணைந்திருந்தது. அன்று முதல் இன்றுவரை நூலகங்கள் மனித வாழ்வில் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. இவை எதிர்கால சந்ததியினருக்கு அறிவை வழங்கும் நிலையங்களாக மட்டுமன்றி கலாசாரத்தைப் பாதுகாத்து வழங்கும் நிலையங்களாகவும் திகழ்கின்றன. ஆரம்ப காலங்களில் நூல்களைப் பாதுகாக்கும் பாதுகாப்பு நிலையங்களாகவே இருந்து வந்துள்ளன. இன்று அவை சமூக முக்கியத்துவம் பெற்று திகழ்கின்றன.

சமூகத்தில், நாட்டில், உலகத்தில் நடக்கும் பல்வேறுபட்ட மாறுபட்ட கருத்துக்களின் எண்ணங்களை போக்குவதும், விருப்பு வெறுப்பின்றி மக்களுக்கு சேவையாற்றும் நிலையங்கள் நூலகங்களாகும். இந்த வகையில் நூலகங்கள் காலத்திற்கு ஏற்ப மாற்றம் பெற்று அறிவுக் கூடமாய், ஆய்வு நிலையமாய், பண்பு ஊட்டும் பரப்பிடமாய் சமுதாய மையமாக எல்லோருக்கும் எல்லாம் என்று இருப்பதான எழிலகமாகத் திகழ்கின்றது எனில் அது மிகையாகாது.

சமூகத்தின் அபிவிருத்தி அவற்றின் கல்வி, கலாசாரத்தில் தங்கியுள்ளது. இவை வளர்ச்சியடைய வேண்டுமாயின் சமுதாயத்தில் அறிவு வளர வேண்டும். வளர்ச்சி அடைந்த சமூகமாக மாற வேண்டில் வாசித்தல் வேண்டும். இதற்காக பொது நூலகங்கள் இப்பணியை செய்கின்றன.

புதுமைக் கவிஞர் பாரதிதாசன் நூலகங்கள் வாழ்வுத் தேர்வை எனப் பின்வரும் கவி மூலம் உணர்த்துகின்றார்.

"மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து தனி மனிதர் தத்துவமாக இருளைப்போக்கி
சக மக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர் தரும் சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டி
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"

ஒரு நாட்டின் முன்னேற்றம் அங்குள்ள நூலகம் கல்வி, கலாசாரம், தொழில் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது என்பர் ஆன்றோர். எனவே தான் மக்களிடத்தில் அறிவுப்பசி விழிப்புணர்ச்சிக்கு நூலைத் தேடும் ஆர்வத்திற்கு தூண்டுகோல் நூலகங்கள் ஆகும்.

எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

பொதுநூலகங்கள் பல்வேறுபட்ட வகையான நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவை,

>ï k _ >ò Äç k (Information materials)

புத்துயிர் தருபவை (Rec reative materials)

உயிர்ப்புத் தருபவை (Inspirative materials)

நூல்கள் ஒன்றை மட்டும் கொண்டிருப்பதில்லை. அவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை, இணைபவை, பிணைபவை.

நூலகங்கள் மனித சமூகத்தினுடைய கல்வி அபிவிருத்தியில் பாரிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் நூலகங்கள் பொருத்தமான ஆவணங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி வாசகர் பாவனைக்குத் தருகின்றது.

நூலகவியலின் தந்தை என போற்றப்படும் எஸ்.ஆர். ரங்கநாதனின் "பஞ்ச"சீலக் கொள்கையின்படி ஒரு நூலகம் எவ்வாறு அமைந்து பணிபுரிய வேண்டும் என பணி புரிகிறது.

1 ஆவது விதி - நூல்கள் அனைத்தும் பாவனைக்கே (Books are for use)

2ஆவது விதி - ஒவ்வொரு வாசகனுக்கும் ஒவ்வொரு நூல் (Every Reader his or her book)

3ஆவது விதி - ஒவ்வொரு நூலுக்கும் ஒவ்வொரு வாசகர் (Every book its Reader)

4 ஆவது விதி - வாசகர் நேரம் பேணுக (Save the time of the Reader)

5ஆவது விதி - நூலகம் வளரும் தன்மையுடைது (Library is a Growing Organism)

இந்த வகையில் பொது நூலகங்கள் சமூக மேம்பாட்டிற்கு பின்வரும் வழிகளில் பணிபுரிந்து வருகின்றன.

கல்வி மையம் - Library as a Education Centre

சமூக நிலையம் - Library as a Social Centre

கலாசார மையம் - Library as a Cultural Centre

அரசியல் மையம் - Political Centre

தகவல் மையம் - Library as a Information Centre

சிக்கன மையம் - Library as a Economical Centre

என்ற ரீதியில் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

ஒரு சமுதாயத்தினுடைய கல்வி வளர்ச்சியில் நூலகம் ஒரு கல்வி மையமாக செயற்படுகின்றது. இவ் வகையில் பொது நூலகங்கள் பல்வேறு சேவை முறைகளை உருவாக்கி செயற்படுகின்றன.

தனிமனிதனின் வாழ்நாள் முழுவதற்குமான கல்வியை வழங்கும் நிலையமாக பொது நூலகங்கள் செயற்படுகின்றன.

இதன் மூலம் வாசிப்புப் பழக்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

"யுனெஸ்கோ"(Unesco) அமைப்பின் கருத்துப்படி நூலகங்களானவை பொது மக்களுக்காக அமைக்கப்பட்டு சேவை செய்யும் நோக்கிற்காக அமைக்கப்பட்டவை எனலாம்.

இவை அனைவருக்குமான சேவையைச் செய்யும் சமூக நிலையங்களாக செயற்படுகின்றன.

நூலகங்கள் ஆவணங்களைச் சேகரித்து அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கின்றன. இச்செயற்பாட்டினால் சமூகத்தின் ஊடாக கலாசார மையமாக திகழ்கின்றன.

"**எழுத்து என்னும் நல்விதைகளை மனதினில் தூவினால் செழித்து வருவது மனித சமுதாயம்**" இதற்கமைய நூலகங்கள் இச்சேவையை வழங்குகின்றன.

"வாசிப்பவன் சுவாசிக்கின்றான்", "இன்றைக்கும் என்றைக்கும் சிறந்த நண்பன் நல்ல புத்தகமே" "A good book is the best of friend, The Same to day and forever" Martin Tuppar

"நூல்கள் அறிவாற்றலின் அழகிய செல்வங்களாகும்"- கோதன் ஸ்விட்

"வாசிப்பு உன்னத அனுபவங்களின் நுழைவாயில்" எனலாம்.

இந்த வகையில் பொது நூலகங்கள் தூயி தசாம்த வகுப்பாக்கம் மூலம் நூல்களை பத்துப் பிரிவுகளாக பிரித்து அவை மென்மேலும் பிரிக்கப்பட்டு வாசகர் தேவையை இலகு வாக்குகின்றன.

வாசிப்பு மனிதனால் பூரணப்படுத்தப்படுகின்றது. வளமான சமூக மேம்பாட்டிற்கு பொதுநூலகங்கள் ஆற்றும் பணிபோற்றத்தக்கது. காலத்தால் அழியாதது. மனித சமூகம் பொது நூலகத்தின் பயன்களை நுகர வேண்டும். பயன்பெற வேண்டும்.

**திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன்**
நூலகர்
நல்லூர் கிளை நூலகம்,
மாநகரசபை,யாழ்ப்பாணம்

# மனித உன்னதத்தை நோக்கிய சத்திய சாயி மனித மேம்பாட்டுக்கல்வி முறை கண்காட்சி

*திட்டங்களை பற்றிய சீன முதுமொழி*

"ஒரு வருட திட்டமாயின் தானியத்தை விதை
சில வருடத் திட்டமாயின் மரத்தை நடு
நூறு வருடத் திட்டமாயின் கல்வி
முறையை சீர்திருத்து"

"நடைமுறைக் கல்வியில் தகவல் பரிமாறல்
விழுமியக் கல்வியில் உன்னத மாற்றம்"

உலகத்தில் பிடித்திருக்கும் கெடுதியான
நோய்கள்

"நேர்மையில்லா வணிகம்
கோட்பாடில்லாத அரசியல்
ஒழுக்கமில்லாத கல்வி
தியாகமின்றி ஆதாரம்
ஊழியமின்றி அறுவடை
அறமில்லாத மனிதயம்
நம்பிக்கையில்லாத பக்தி
மனித நேயமற்ற விஞ்ஞானம்"

*- சத்திய சாயி பாபா*

உள்ளுணர்வு ஆண்டவனால் தந்த பவித்திரமான அன்பளிப்பு. தர்கக அறிவியல் இதன் சேவகன். தற்போதைய சமுதாயம் அன்பளிப்பை மறந்துவிட்டு சேவகனையே கௌரவப்படுத்துகிறது. -Albert Einstein

இறை சக்தியானது தன்மீது அன்பு கொள்ள யாருமில்லாததாலும் தான் அன்பு கொள்ள யாரும் இல்லாததாலும் இப்பிரபஞ்சத்தை தனது சங்கல்பத்தினால் வெளிப்படுத்தியது. அப்போது எழுந்த ஓசையே ஓம் என்ற பிரணவ ஓசையாகும். விஞ்ஞானமும் பிரபஞ்சம் ஏதோ ஒரு சப்தத்துடன் (Big Bang) உருவாகியதென்றே கூறுகிறது.

பஞ்சபூதங்களாலான ஆகாயம், வளி, அக்னி, நீர், நிலம் ஆகியவை வெளிப்பட்ட பின்பு பல உயிரினங்கள் வெளிப்பட்டன. உயிரினத்தால் சிகரமாக விளங்குவது மனித நேயமாகும். மனிதனுக்கு மாத்திரம் தெரிவு (Choice) கொடுக்கப்பட்டது. மேலும் அவனுக்குச் சிந்திக்கும் ஆற்றலும் இறை சக்தியை உணரும் ஆற்றலும் கொடுக்கப்பட்டன. உலகில் எல்லா நாமம் ரூபம் இறை சக்தியான சத் சித் ஆனந்தம் ஆகியவற்றினால் உண்டாக்கப்பட்டதேயாகும். படைப்பில் சகலதிலும் இறையுணர்வு (Universal Consciousness) இருப்பதுடன் அவற்றிற்கு அப்பாலும் வியாபித்துள்ளது.


மனிதனுக்கு தெரிவைக் கொடுக்கும் போது நல்ல வழியில் செல்லவும் தீய வழியில் செல்லவும் வாய்ப்புக்கள் உண்டனவென்றும் எப்போதும் செயலுக்குரிய விளைவை அனுபவித்தே ஆக வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் மனிதனில் தன்னலம் ஓங்கியதால் அவன் இறையுணர்விலிருந்து வேறுபட்டுள்ளான். இதனால் வன்மை, வஞ்சம் மேலோங்கி மனித மேம்பாடுகள் நலிவடைந்தன. மனிதநேய அடிப்படையில் தற்காலம் இருளாகவே தோன்றுகிறது. ஆனால் அது விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் நோக்கில் பொற்காலமாகத் தோன்றுகிறது. மகிழ்ச்சி மனத்திருப்தி, சாந்தி இல்லையென்றும் மனிதன் ஏங்குகிறான். மனிதன் தனது தார்மீகக் கடமைகளிலிருந்து வழுகிவிட்டான். இதை மாற்ற ஆண்டவன் தான் வழி வகுக்க வேண்டுமென்று மகான்கள் ஆண்டவனைப் பிரார்த்தித்தார்கள்.

கல்விச் சீர்திருத்தமே ஒரு திட்டமான நீண்ட காலம் நீடிக்கும் ஒரு மாற்றத்தை கொண்டுவரும் என்று கூறி சத்தியசாயி பாபா மனித மேம்பாட்டுக்கல்வி முறையொன்றை (Sathya Sai System of Education) தந்துள்ளார். நடைமுறைக் கல்வி பரீட்சையில் சித்தியையும் தொழில் வாய்ப்பையுமே நோக்காகக் கொண்டுள்ளது என்று மனித மேம்பாட்டுக் கல்வி மாணவர்களில் உன்னத மாற்றத்தை ஏற்படுத்தும் என்று இதை "எடுகெயர்" என்று கூறியுள்ளார்.

ஒரு பறவை மேலே பறப்பதற்கு இரு சிறகுகளும் காற்றும் தேவையாகும். இதே போல் மனிதனும் நிம்மதியுடனும் மனத்திருப்தியுடனும் சமூக இசைவுடனும் மென்மேலும் வெற்றிகளை அடைவதற்கு உலகியற் கல்வியும் ஆன்மீகக் கல்வியும் இறையருளும் தேவையென்று பகவான் கூறியுள்ளார். சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வியின் தத்துவம், நோக்கு, பாடவிதானம் கற்பிக்கும் நுட்பங்கள், மதிப்பீடுகள் பல நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுப் பெற்ற அனுபவங்கள் யாவும் கண்காட்சியில் வெளிப்படுத் தப்பட்டுள்ளன.

மனிதன் தெய்வீகமானவன், அவனுள் உறையும் தெய்வீகத்தை வெளிக்கொணர்வதே இக்கல்வி முறையின் தத்துவமாகும். தெய்வீகம் என்பது ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளான அன்பு, சத்தியம் தர்மம், சாந்தி, அகிம்சை என்பதைக் குறிக்கின்றது. வெளிக்கொணர்வது என்பது நாளாந்த வாழ்வில் இம்மேம்பாடுகளை உணர்வு, எண்ணம், சொல், செயல் மூலம் சகல செயற்பாடுகளிலும் வெளிப்படுத்துவதையே குறிக்கிறது. இதையே உன்னத மாற்றம் (Transformation), இறை






உணர்வு மேலோங்குதல் (Rise of Consciousness) என்றும் கூறப்படுகின்றது. இவையெல்லாம் மனதின் தொழிற்பாடேயாகும். மனதின் செயல், உயர் மாற்றத்திற்கான தடைகள், அகற்று வழிகள் ஆகியவை கண்காட்சியில் வெளிப்படுத்தியுள்ளன. இக்கல்வி முறையின் தனித்துவமானவையாவன,

❖ ஆசிரியரின் முன் மாதிரிக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியரை நீர்த் தொட்டிகளுக்கும் மாணவர்களை நீர்ப்பைப்புகளுக்கும் ஒப்பிட்டுள்ளார்கள். தொட்டியில் இருப்பதே பைப்பில் வரும் என்பதே உள்ளார்த்தம்.

❖ உள்ளுணர்வை விருத்தி செய்ய பிரார்த்தனை, ஜெபம், தியானம், யோகாசனம் முதலியன கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

❖ ஒவ்வொரு பாடத்திலும் துணைபாட நிகழ்வுகளிலும் மனித மேம்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன.

❖ தனிநபரிலும் பார்க்க குழுச் செயல்களுக்கே முக்கியத்துவம்.

❖ போட்டியிலும் பார்க்க கூட்டுறவுக்கே முக்கியத்துவம்.

❖ சகல மாணவர்களுக்கும் பரிசில்கள் கொடுக்கப்படும்.

❖ மேல் வகுப்பு மாணவர்கள் கீழ் வகுப்பு மாணவர்களுடன் இணைந்து அவர்களுக்கு உதவி செய்து பராமரிப்பார்கள்.

❖ ஆசிரியர்கள் தாயைப் போல பிள்ளைகளுடன் நேசமாகப் பழகுவார்கள்.

❖ மற்றவர்களுடன் பகிர்தல், மற்றவர்களில் கரிசனை கொள்ளல் பழக்கத்தில் வைத்திருப்பது

❖ சமூக உணர்வை, சமூக சேவை மூலம் விருத்தி செய்தல்.

❖ பாடங்களில் எடுக்கும் புள்ளிகளிலும் பார்க்க நடத்தை குறிப்புக்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தல்.

❖ பாடசாலையில் அன்புதான் மொழி கட்டுப்பாடுகள் ஊடகம்

❖ சர்வமத உன்னதக் கொள்கை

❖ இலவசக் கல்வி

எவ்வாறு வெற்றியடையலாம், கோபம், நேரம் முகாமைத்துவம் பற்றியும் பெற்றோரியல் பற்றியும் கண்காட்சியில் விளக்கங்கள் கொடுக்கப்படும்.

❖ "மனிதன் தன்னைத் திருத்திக் கொண்டால் உலகம் தானாகவே திருந்தும்"

❖ "புறத்திலும் பார்க்க அகமே முக்கியம்"

❖ "சத்தியம் பேசு தர்மத்தை கடைப்பிடி"

ஒரே ஒரு மதம் - அது அன்பு மதம்
ஒரே ஒரு மொழி - அது இதய மொழி
ஒரே ஒரு குலம் - அது மனித குலம்
ஒரே ஒரு கடவுள் - அவர் எங்கும் நிறைந்தவர்

*சத்தியசாயி பாபா.*

வைத்திய கலாநிதி
இ.கணேசமூர்த்தி
யாழ்ப்பாணம்.

# ஆவா குழுவை வேட்டையாடும் நடவடிக்கையில் அதிரடிப்படை

(கொழும்பு)—

**சுன்னாகத்தில் பொலிஸ் புலனாய்வாளர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுக்கு ஆவா குழு துண்டுப்பிரசுரம் மூலம் உரிமை கோரியுள்ளதையடுத்து, வடக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா நகரப் பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படைப் பிரிவுகளும், பொலிஸ் குழுக்களும் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் சம்பவத்தை அடுத்து, வடக்கின் பிரதான நகரங்களில் சிறப்பு அதிரடிப்படை அணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஆவா குழுவைக் கண்டறிவதில் மாத்திரமன்றி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணியிலும் சிறப்பு அதிரடிப்படை அணிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே ஆவா குழுவைச் சேர்ந்த ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சன்னா, தேவா, பிரகாஸ் ஆகிய அடையாளம் காணப்பட்ட ஏனைய உறுப்பினர்களைத் தேடி சிறப்பு அதிரடிப்படையினர் வேட்டையில் இறங்கியுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (இ-7-10)

# மதிப்புக் கூட்டு வரி திருத்தச்சட்டம் நிறைவேறியது

## வாக்கெடுப்பை புறக்கணித்தது தமிழ்க் கூட்டமைப்பு

இலங்கை அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட மதிப்புக் கூட்டு வரி திருத்தச் சட்டம் 66 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் மதிப்புக்கூட்டு வரி திருத்தச் சட்டமூலம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன் போது, இந்தச் சட்டமூலத்துக்கு கூட்டு எதிரணி மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

விவாதத்தின் முடிவில் இந்தச் சட்ட மூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, 112 வாக்குகள் ஆதரவாகவும், 46 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன. 65 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

கூட்டு எதிரணி மற்றும் ஜேவிபி உறுப்பினர்கள் இந்த திருத்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.


அதேவேளை, சபையில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. புதிய மதிப்புக் கூட்டு வரி திருத்தச்சட்டத்தின் மூலம் இந்த ஆண்டு இறுதியில், 1.8 பில்லியன் ரூபா வரி வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (இ-7-10)

# இந்திய இராணுவ இரகசியங்களுடன் பாகிஸ்தான் தூதரக அதிகாரி கைது!

## டில்லியில் பெரும் பரபரப்பு

*(டில்லி)*

***இந்திய இராணுவ இரகசியங்களை உளவு பார்த்ததாக பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவரை டில்லி குற்றப்பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.***




டில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் முகமது அக்தர் (வயது-35) இந்திய இராணுவ இரகசியங்களை உளவு பார்ப்பதாக இரகசிய தகவல் வெளியானது.

இதையடுத்து அவரது செயற்பாடுகளை கடந்த ஒரு வார காலமாக உளவுத்துறை கண்காணித்து வந்தது. இதில் அவர் மீதான சந்தேகம் ஊர்ஜிதமாகியுள்ளது.

இதையடுத்து அவரை டில்லி குற்றப்பிரிவு பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவரிடம் இந்திய இராணுவத் தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் இருந்துள்ளன.

பாகிஸ்தான் தூதரக அதிகாரி கைது செய்யப்பட்டிருப்பது தொடர்பாக உள்துறை அமைச்சகத்துக்கு டில்லி குற்றப்பிரிவு பொலிஸார் அறிக்கை அனுப்பியுள்ளனர். உள்துறை அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித்துக்கு இந்திய வெளியுறவுத்துறை சம்மன் அனுப்பி விளக்கம் கேட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை, பாகிஸ்தான் படைகள் தொடர்ந்து எல்லையோர இராணுவ நிலைகள் மற்றும் கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் நிலையில், தூதரக அதிகாரி கைது செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

# ஜெயலலிதாவை நலம் விசாரிக்க மோடி விரைவில் சென்னை விஜயம்



(சென்னை)

உடல்நலக்குறைவு காரணமாக சென்னை அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்திக்க விரைவில் பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் சென்னை செல்லவுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் டில்லியில் கருத்துத் தெரிவிக்கையில், வைத்தியசாலையில் உள்ள ஜெயலலிதா, மாநில முதல்வர் என்பதால் அவரது சிகிச்சைக்கு தேவைப்படும் சகல உதவிகளையும் வழங்குமாறு தமிழக அரசு தரப்பிலும் தனியார் வைத்தியசாலை சார்பிலும் மத்திய சுகாதாரத் துறையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதையடுத்து,டில்லியில் உள்ள எய்ம்ஸ் வைத்தியசாலையில் நிபுணத்துவம் பெற்ற குறிப்பிட்ட சில துறைகளின் வைத்தியர்கள் சென்னைக்கு அவ்வப்போது அனுப்பி வைக்கப்பட்டு நிலைமையைக் கண்காணித்து வருகிறோம்.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியக் குழுவினருக்குத் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் அவர்கள் வழங்கி வருகின்றனர்.

தமிழக முதல்வர் இயல்பு நிலைக்குத் திரும்ப மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது. மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள தகவலின்படி, தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

தொற்று பரவக்கூடாது என்ற ஒரே காரணத்தால் தான் அவருக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியக் குழு நீங்கலாக, வெளி நபர்கள் அவரை சந்திக்க தனியார் வைத்தியசாலை அனுமதிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்திய ரீதியில் இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கம் தான். முதல்வர் ஜெயலலிதா உடல்நிலை தேறி அவர் பேசத் தொடங்கியவுடன் விரைவில் நானும் பிரதமர் மோடியும் சென்னைக்குச் சென்று அவரை நேரில் சந்திப்போம் என்றார். (இ-7)

# கருணாநிதிக்கு அலர்ஜி



தமிழக முதல்வர் ஜெயலலிதாவைத் தொடர்ந்து தி.மு.க. தலைவர் கருணாநிதி திடீரென உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டார்: இது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் தி.மு.க. தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில், கருணாநிதிக்கு ஒவ்வாமை ஏற்பட்டு, அதனால் உடல் நலம் பாதிக்கப்பட்டு ஓய்வெடுத்து வருகிறார். எனவே, பார்வையாளர்கள் தலைவரை நேரில் வந்து பார்ப்பதை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

கருணாநிதி சில தினங்களாக காய்ச்சலால் அவதிப்பட்டுள்ளார். இதனால் அவர் அதிகமான மாத்திரைகளை எடுத்துக் கொண்டுள்ளார். இதில் அலர்ஜி காரணமாக அவருக்கு உடலில் கொப்பளங்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் அவரால் அதிக நேரம் உட்கார்ந்த நிலையில் இருக்க முடியவில்லை.

வீல்செயரில் அவரால் ஏறி உட்கார முடியாமல் கஷ்டப்பட்டதால் தான், சி.ஐ.டி. காலனி வீட்டுக்கு அவர் போகாமல் கோபாலபுரத்திலே உள்ளார். கருணாநிதியின் தோலில் ஏற்பட்டுள்ள அலர்ஜிக்கு சிகிச்சை அளிப்பதற்காக காவேரி வைத்தியசாலையில் இருந்து இரண்டு வைத்தியர்கள் வந்து சென்றுள்ளனர்.

அவர்கள் காய்ச்சல் இருந்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கலாம் என்று ஆலோசனை கூறியுள்ளனர்.முதல்வர் ஜெயலலிதா அப்பலோவில் அனுமதிக்கப்பட்டிருப்பதால், வேறு வைத்தியசாலையில் அனுமதிக்கலாம் என்று ஸ்டாலின் கூறியுள்ளார். ஆனால் அதற்குள் கருணாநிதிக்கு காய்ச்சல் கொஞ்சம் குணமாகிவிட்டதாகவும், அவர் தன் உதவியாளர்களுடன் சிறிது நேரம் பேசினார் என்றும் கூறப்படுகிறது. கருணாநிதிக்கு தேவையான பணிவிடைகள் அனைத்தையும் கருணாநிதியின் உதவியாளர் நித்யாதான் செய்துவருகிறார்.

அதே போல் கருணாநிதியின் மகள் செல்வி கருணாநிதிக்கு தினமும் உணவு கொண்டு வந்து கொடுத்து கவனித்து கொள்கிறாராம். கருணாநிதிக்கு காய் ச்சல் தற்போது குறைந்து விட்டதால் அவர் மீண்டும் பழைய நிலைக்கு விரை வில் திரும்புவார் என்று கூறப்படுகிறது. (இ-7)

# இந்தியத் தூதுவருக்கு பாக்.மீண்டும் சம்மன்

(இஸ்லாமாபாத்)

இந்திய இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டியுள்ள பாகிஸ்தான், இந்தியத் தூதர் ஜெ.பி. சிங்கிற்கு 2ஆவது நாளாக சம்மன் அனுப்பியுள்ளது.

எல்லைப் பகுதிகளிலுள்ள பாகிஸ்தான் நிலைகளின் மீது இந்திய இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதாகவும், இதில் 2 பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் குற்றம் சாட்டிய அந்நாட்டு அரசு, பாகிஸ்தானுக்கான இந்திய தூதர் ஜெ.பி.சிங்கிடம் கண்டனம் தெரிவித்தது.

மேலும் முழுமையான விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என சம்மன் அனுப்பியது.

இந்நிலையில் பாக்.எல்லையில் இந்திய இராணுவம் மீண்டும் அத்துமீறி தாக்குதல் நடத்துவதாக குற்றம் சாட்டிய பாகிஸ்தான் ஜெ.பி. சிங்கிற்கு நேற்று முன்தினம் 2ஆவது நாளாக சம்மன் அனுப்பியுள்ளது. (இ-7)

# தீபாவளியைக் கொண்டாடும் சிங்கப்பூர் அரசு!







சிங்கப்பூரில், தீபாவளியை விமர்சையாகக் கொண்டாட, அந்நாட்டின் அரசு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அந்நாட்டின் வீதிகள், மெட்ரோ புகையிரத நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் பொது இடங்கள் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்டுள்ளன.

## இத்தாலியில் பாரிய நிலநடுக்கம்; பல கட்டடங்கள் இடிந்து சேதம்

(ரோம்)

இத்தாலியில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக தேவாலயம் உள்ளிட்ட முக்கிய கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

மத்திய இத்தாலியில் நேற்று முன்தினம் இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

மார்ச்சே மற்றும் அம்ப்ரியா பிராந்தியங்களில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.4 ஆக பதிவாகியிருந்தது. தெற்கு இத்தாலியின் சில பகுதிகளிலும் இந்த நில அதிர்வு உணரப்பட்டது.



இந்த நிலநடுக்கத்தால் மத்திய இத்தாலியில் கட்டடங்கள் கடுமையாக குலுங்கின. பயந்துபோன பொது மக்கள் வீடுகளை விட்டு அவசரம் அவசரமாக வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். குறிப்பாக உஸ்சிதா நகரில் கடும் சேதம் ஏற்பட்டது. மீட்புப் பணிகள் நடைபெறுகின்றன.

உஸ்சிதா நகரில் தேவாலயம் மற்றும் பல்வேறு கட்டடங்கள் கடுமையாக சேதம் அடைந்திருப்பதாகவும், கணக்கெடுப்பு முடிந்த பிறகே சேதமடைந்த கட்டடங்களின் முழு விபரம் தெரியவரும் என்றும் நகர மேயர் கூறியதாக ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது மலைக் கிராமம் ஒன்று முற்றிலும் அழிந்தது. அதனைச் சுற்றியுள்ள நகரங்களும் கடும் பாதிப்புக்குள்ளாகின. இதில் சுமார் 300 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கறுப்பினத்தவர்கள் மீது கவனம் செலுத்தும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரு வாரங்களே உள்ள நிலையில், இறுதிக்கட்ட பிரசார நடவடிக்கைகள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன.

அதன்படி குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப், தனது இறுதி இலக்கை கறுப்பின ஆபிரிக்க அமெரிக்கர்களை நோக்கிச் செலுத்தியுள்ளார்.

அதன்படி அமெரிக்காவின் உள் நகரங்களில் கறுப்பின அமெரிக்கர்களுக்கு பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, கல்வி என்பவற்றில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.

வடகரோலினாவில்நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற பிரசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், 'நான் கறுப்பின அமெரிக்கர்களின் வளர்ச்சி குறித்து மிகுந்த கவனம் செலுத்தி வருகிறேன். அதன்படி அவர்களை பாதுகாப்பான சமூகத்தினராக வழிவகுக்கவும், சிறந்த கல்வியை ஏற்படுத்திக் கொடுக்கவும், உயர் ஊதிய வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கவும் உறுதி கொள்கிறேன்.

அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு கறுப்பின குடிமகனுக்கும் இவற்றை முறையாக பெற்றுக்கொள்ள உரிமையுண்டு. எனவே உங்கள் பிரதிநிதியாக செயற்பட எனக்கு உங்கள் ஆதரவு அவசியமாகும்.



கறுப்பின குடிமக்கள் நமது நாட்டிற்காக பல்வேறு தியாகங்களை செய்துள்ளனர்.

அதேவேளை, தற்போதைய நீதித்துறை முறைமை தொடர்பில் ஆபிரிக்க அமெரிக்க குடிமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

ஆனால் எதிர்காலத்தில் ட்ரம்ப் நிர்வாகம் ஏற்படுத்தப்படின் அனைவருக்கும் பொதுவான சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு அனைத்து மக்களும் பாரபட்சமின்றி நடத்தப்படுவர்' என்றும் உறுதியளித்தார். (இ-7)

## தொழில் தொடங்க சிறந்த நாடு நியூசிலாந்து

உலகளவில் தொழில் தொடங்க சிறந்த நாடு என்ற பெருமையை உலக வங்கி நியூசிலாந்து நாட்டிற்கு வழங்கியுள்ளது.

உலக வங்கி 2017 ஆம் ஆண்டு தொழில் தொடங்க ஏற்ற நாடுகள் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 10 வருடங்களாக முதலிடத்தில் இருந்த சிங்கப்பூரை பின்னுக்குத் தள்ளி நியூசிலாந்து முதலிடம் பெற்றுள்ளது.

தொழில்தொடங்க நினைப்பவர்களுக்கு சட்டச் சிக்கல்கள் குறைவு, குறுகிய காலத்தில் தொழில் தொடங்கலாம் போன்ற காரணங்களால் நியூசிலாந்து நாட்டிற்கு இந்தப் பட்டியலில் முதலிடம் கிடைத்துள்ளது.

2 ஆவது இடத்தை சிங்கப்பூரும், 3 ஆவது இடத்தை டென்மார்க் நாடும் பிடித்துள்ளன.

4 ஆவது இடத்தில் ஹொங்கொங், 5 ஆவது, 6 ஆவது இடங்களில் முறையே தென் கொரியா, நோர்வே நாடுகள் உள்ளன.

அமெரிக்கா 7 ஆவது இடத்திலிருந்து 8ஆவது இடத்திற்கு சென்றுள்ளது.

ஜப்பான் 34 ஆவது இடத்தில் உள்ளது. மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கும் சீனா 84 ஆவது இடத்திலிருந்து 78 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இந்தியா இப்பட்டியலில் 130 ஆவது இடத்தில் நீடிக்கிறது. (இ-7)

## கொலம்பியாவின் பிரதான நெடுஞ்சாலையில் பாரிய நிலச்சரிவு

## 7 பேர் உயிரிழப்பு

கொலம்பிய தலைநகர் பொகோட்டாவிலிருந்து மெதெலின் வரையான பிரதான நெடுஞ்சாலையின் மலைப்பாங்கான பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 7 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 10 இற்கும் அதிக மானவர்கள் மண்ணில் புதையுண்டு இருப்பதாக கொலம்பிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த பகுதியில் மீட்புப் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கொலம்பியாவில் அண்மையில் பெய்த கடும் மழையின் எதிரொலியாக நிலச்சரிவு மற்றும் பாறைச் சரிவு போன்ற அனர்த்தங்கள் இடம்பெற்று வருகின்றன.



இதனால் நான்கு நெடுஞ்சாலைகள் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் தெரிவித்த ஆண்டியோகுவா ஆளுநர், 'குறித்த பகுதியில் சுரங்கப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களும் குறித்த அனர்த்தத்தில் சிக்குண்டு இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அனர்த்தம் நேர்ந்த பகுதியில் சுமார் 11 சுரங்க பணியாளர்கள் பணிபுரிந்து வந்ததாக சுரங்க உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இதுவரை 5 ஊழியர்களது சடலங்களே மீட்கப்பட்டுள்ளன. அதேவேளை, மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரது சடலமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி மீட்பு பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன' எனத்தெரிவித்தார். (இ-7-10)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# காலநிலை மாற்றமும் உணவு உற்பத்தியும்

(தொடர்ச்சி....)

இவற்றின் மாற்றம் காரணமாக உற்பத்தித்திறன், பொருளாதாரம் மற்றும் வருமானம் பாதிக்கப்படுகின்றது. இவ்வுற்பத்தியினால் கணிசமான அளவில் சூழலிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதாவது கடலுணவு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் நைதரசன் கழிவுகள் மற்றும் ஏனைய வாயுக்கள் சூழல் மாசடைதலுக்கு காரணமாக அமைமளவில் பாதிக்கப்படுகின்றது.

இலங்கை பெருமளவில் விவசாயத்திலும், கடலுணவு உற்பத்தியிலும் தங்கியுள்ளதொரு வளர்ந்து வரும் நாடாகும். எனவே இவ்வாறான காலநிலை மாற்றம் விவசாயம் மற்றும் கால்நடைகளில் ஏற்படுத்தும் தாக்கம் எம் நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. 2012 ஆம் ஆண்டில்

காலநிலைமாற்றம் சில மோசமான பாதிப்புக்களை ஏற்



காலநிலை மாற்றங்களை

நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தவிர்க்க முடியாமல் விவசாயம் மற்றும் பொருளாதாரத்

அதாவது ஈரமான


மண்டலத்தில் மிக அதிகமான மழைவீழ்ச்சியும் உலர்வலயத்தில் மிகக் குறைவான மழைவீழ்ச்சியும்

இருக்கும் என பார்க்கப்படுகின்றது. மழை மற்றும் காலநிலை மாற்றங்களை கணிப்பது மிகவும் கடினம். இருப்பினும் கணிக்கமுடியாத இந்த காலநிலை மாற்றமானது வருங்காலத்தில்

மிகப்பெரிய சவாலாக அமையும்

மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கையானது மழை வீழ்ச்சி மற்றும் வெப்பநிலையால்

பாதிக்கப்படக் கூடியதாகவுள்ளதோடு விவசாய உற்பத்தியும் சீரற்ற காலநிலைமாற்றத்




என்பதில் ஐயமில்லை. இது தவிர அண்மையில் வெள்ளப் பெருக்கினாலும்

அதனைத் தொடர்ந்த கடுமையான வரட்சியினாலும் பயிர்கள் அழிக்கப்பட்டதோடு காலநிலையில் ஏற்பட்ட சடுதியான மாற்றம் இவற்றுக்கு

காரணமாகின்ற

தினால் கேள்விக்குறியாகும் நிலை இன்று உருவாகியுள்ளது. காலநிலை மாற்றமானது சுற்றுச்சூழலுடன் நெருங்கிய உறவு கொண்டிருப்பதால் சூழல் மாசடைதலைத் தடுப்பதன் மூலம் காலநிலையில் ஏற்படும் மாற்றத்தைக் கட்டுப்படுத்த




கின்றன.

இவை தவிர விவசாயம் சாராத முறைகளான உணவு மற்றும் குடிபான உற்பத்தி, உணவின்

குளிர்பதனிடல், வர்த்தகப் பரிமாற்றம் மற்றும் போக்குவரத்து ஆகியனவும் சூழல் மாற்றத்தில்

செல்வாக்கு செலுத்துகின்றமையால் அவையும் காலநிலையில் ஏற்படும் மாற்றத்திற்கு


காரணகர்த்தாவாகின்றன. இதனால் உணவு உற்பத்தியும் பெருபடுத்தியுள்ளது. புயல், வெள்ளம் மற்றும் மோசமான காலநிலை காரணமாக ஏற்பட்ட மனித உயிர்ச் சேதம் மட்டுமன்றி பல்வேறு பகுதிகளில்

விவசாயத்துறையிலும் மற்றும் ஏனைய உணவு உற்பத்தியிலும் பெருமளவு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இவற்றிற்கு மேலாக ஏற்படும் காலநிலையின் சீரற்ற தன்மைக்கான காரணகர்த்தா

நாமென்பதனை நாம் நினைவில் கொள்ளத் தவறக் கூடாது. இவ்வாறான தில் ஏற்படும் எதிர்மறையான தாக்கத்தைக் குறைப்பதற்கான மாற்று வழிகளை ஏற்படுத்தி சூழலைப் பாதுகாக்கவும் நாம் பின்னிற்கக் கூடாது.

அண்மித்த ஒரு ஆய்வறிக்கையின்படி கடந்த ஆண்டில் வெப்பநிலையானது 0.3°C ஆல் அதிகரித்துள்ளதாகவும், 2050 ஆம் ஆண்டளவில் வெப்பநிலையானது 1.2-1.6°C ஆல் உயரும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இதனால் மழைவீழ்ச்சியின் அளவில் மாற்றம் ஏற்படும்.

எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலர்வலயத்தில் தென்கிழக்கு




விவசாயத்தில் உலகளாவிய ரீதியிலான பச்சைவீட்டுவாயுக்களின் வெளியீடு

பருவ மழையினால்

அதிகளவிலான மழைவீழ்ச்சியும் வடகிழக்கு பருவ மழையினால் குறைந்தளவிலான மழை வீழ்ச்சியும் கிடைக்கப் பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என்றால் அது தவறாகாது. இலங்கையின முக்கிய பயிர்களான நெல், தேயிலை

முடியும் என்பதே ஆய்வாளர்களின் எதிர்வுகூறல்.

(முற்றும்)

அகிம்சா ஜெயக்குமார்
Demonstrator,
Department of Chemistry,
University of Jaffna.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 171

2016 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை வென்றவர் யார்?

புதிர் 171இற்கான விடைகளை 07.11.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) வதிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 170 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

தெய்வபகவான் இராஜரட்ணம்
மடத்தடி ஒழுங்கை,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

புதிர் 170க்கான கேள்வியும் விடையும்:
சர்ச்சைக்குரியதாகக் கருதப்பட்ட "மூன்றுபெற்றோர் குழந்தை" ("3 Parent baby") என்ற புதிய தொழில்நுட்பத்தில் உலகின் முதல் ஆண்குழந்தை எங்கே பிறந்துள்ளது? மெக்சிக்கோ

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 171

சரியான விடை:-....................
முழுப்பெயர்:-....................
முகவரி:-....................
தொ.பே. இல:....................
கையொப்பம்:....................

# மைத்திரி-ரணில் கூட்டு அரசு இராஜினாமா செய்ய வேண்டும்

## கூட்டு எதிரணி கூச்சல்

(கொழும்பு)

**நாட்டின் தற்போதைய நிலைமைகளை வேடிக்கையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று தெரிவிக்கும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர், ஆட்சி செய்ய முடியாவிட்டால் மைத்திரி - ரணில் அரசாங்கம் இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.**

யாழ்ப்பாணத்திலும். கிளிநொச்சியிலும் தொடரும் வன்முறைகளை அடுத்து பொலிஸாரை காவல் கடமையிலிருந்து முற்றாக விலக்கிக்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர எதற்காக உத்தரவிட்டுள்ளார் என்றும் மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

சுன்னாகம் பிரதேசத்தில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்திற்கு ஆவா என்ற அமைப்பு உரிமை கோரியுள்ள நிலையில், பிரதமர் ஆவா வந்தது - போனது என்று நாடாளுமன்றில் கூறி நகைப்புக்கு இடமாக்க முயன்றிருக்கின்றார் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (இ-7-10)

# வடக்கில் பொலிஸார் வீதியிலிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம்

## குமுறுகிறார் விமல் வீரவன்ச

வடக்கில் தற்போது பொலிஸார் வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றஞ் சாட்டியுள்ளார்.

தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கப்பம் வழங்கி சபையில் பெரும்பான்மையை தக்க வைத்துக் கொண்டு கடந்த அரசாங்கத்தால் அணைக்கப்பட்ட தீயை மீண்டும் எரியச்செய்து வருவதாகவும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வற் வரி திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச. அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

வடக்கிலுள்ள சிவில் அமைப்புக்கள் 2015 ஜனவரி மாதத்திற்கு முன்னர் இல்லாதளவு ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம்சாட்டிய. வீரவன்ச. ஆவா குழு என படுகொலைக் கும்பலொன்றும் உருவாகியுள்ளதாகவும் தெரி



வித்துள்ளார்.

இதன்மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது வடக்கில் அணைக்கப்பட்ட இனவாதத் தீ மீண்டும் எரியத் தொடங்கியுள்ளதாகவும் கூறியுள்ளார்.


அதுமட்டுமன்றி, கொழும்பியா போன்று பட்டப்பகலில் கொழும்பில் படுகொலைகள் அதிகரித்துள்ளதாகவும் குற்றம்சாட்டிய வீரவன்ச. நாட்டின் சகல பகுதிகளிலும் பாதாள குழுக்கள் மீண்டும் துளிர் விடத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவற்றைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியதால், கட்டியெழுப்பப்பட்ட சமாதானம் தம்மை விட்டு நீங்கிவிடுகிறதா என்ற சந்தேகம் மக்கள் மனங்களில் எழத் தொடங்கியிருப்பதாகவும் விமல் வீரவன்ச மேலும் எச்சரித்திருந்தார். (இ-7)

# இளைஞன் மரணம்;விமலின் மனைவியிடம் விசாரணை

(கொழும்பு)

விமல் வீரவன்சவுக்கு சொந்தமான வீட்டிலிருந்த இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விமல் வீரவன்சவிற்குச் சொந்தமான ஹோரகந்தர வீட்டிலிருந்தே குறித்த இளைஞன் மரணமடைந்துள்ளார் என தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.



லஹிரு ஜனித் எனும் 24 வயது இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்பதோடு, குறித்த இளைஞன் விமல் வீரவன்சவின் மகனின் நண்பர் எனவும், அவர் அடிக்கடி விமல் வீரவன்சவின் வீட்டிற்கு வருபவர் என்பதோடு, அங்கு தங்கும் வழக்கத்தையும் கொண்டவர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 25 ஆம் திகதி இரவு தூக்கத்திற்குச் சென்ற குறித்த நபர் முற்பகல் 10 மணி ஆகியும் தூக்கத்திலிருந்து எழும்பாததை அடுத்து, கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், அவர் மரணித்துள்ளதாக தெரிவித்த வைத்திய அதிகாரிகள், அவரது மரணம் இடம்பெற்று 10 மணித்தியாலங்களுக்கு மேலாகின்றது எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச மற்றும் மகனிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## திடுதிப்பென்று நுழைகிறீர்களா?

தாய் தன் மகனுடைய அறைக்குள் நுழைவது என்றால் கூடச் பெயரைச் சொல்லி அழைத்தோ கதவைத் தட்டியோ நுழைவது தான் நாகரிகம்; நல்ல பண்பாடும் கூட.

சேச்சே! என்ன ஒரு போலியான சம்பிரதாயம்! தாய் தன் மகன் அறைக்குள் நுழையக் கூடவா கட்டுப்பாடு? என்று சிலர் முணுமுணுக்கலாம். ஆனால் இது சம்பிரதாயம் அல்ல. பொருள் பொதிந்த செயல் என்பதை விளக்கியாக வேண்டும்.

மகன் புதிதாகத் திருமணமானவனாக இருக்கலாம். கண்டகண்ட நிலையில் அவன் தன் அறையில் இருக்கலாம். பிரம்மச்சாரி என்றாலும் அவன் தூங்கிக் கொண்டிருந்தாலும் அவன் உடைகள் கலைந்து கிடக்கலாம். தாய்க்கு அது விகற்பமாகத் தெரியாது என்றாலும் கதவு சட்டெனத் திறக்கப்படுவதன் மூலமாக வரவேற்பறையில் காத்திருந்த ஒரு பெண்மணி அந்தக் காட்சியைக் காண நேரலாம். ஏன்-அவனே கூடக் கதவைத் தாளிடாமல் உடை மாற்றிக் கொண்டிருக்கலாம். எதற்கு வம்பு? தட்டிவிட்டுத் திரும்பினால் உஷாராகி விடு வான். அவனது நிலைகள் மாறலாம் இல்லையா? ஓர் ஆணுக்கே இந்த நிலை என்றால் பெண்களின் அறை என்றால் கேட்கவே வேண்டாம்.

எங்கள் வீட்டில் ஆளுக்கொரு அறை யெல்லாம் இல்லை. எல்லோருக்கும் பொதுவாக ஓர் அறைதான் என்று ஒருவர் சொல்கிறார். என்று வைத்துக் கொள்வோம். அத்தகைய அறையின் கதவுகூட அரைகுறையாகச் சாத்தப்பட்டிருந்தால் கதவைத் தட்டிவிட்டுத்தான் தன் அலுமாரியை நோக்கி அவர் நடக்க வேண்டும். கதவின் பின் அவனது சகோதரியோ கூட-ஏன் தாயோ கூட உடை மாற்றிக் கொண்டிருக்கலாம். விருட்டென்று நுழைந்து ஏன் அசட்டுப் புன்னகை சிந்த வேண்டும்?

ரொம்பத் தெரிந்த வீடு என்றாலும் , கதவு திறந்தே கிடந்தாலும் கூட விருட்டென்று நுழைந்து சோபாவில் போய் உட்கார்ந்துவிடக் கூடாது. நாம் வந்துவிட்டது வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரிந்த பிறகுதான் உள்ளே காலடி எடுத்து வைக்க வேண்டும். - எவ்வளவு நெருக்கமானவர்கள் வீடாக இருந்தாலும் சரி.

சில வீடுகளில் கதவு என்னவோ திறந்து கிடக்கும். ஒளிவு மறைவு இல்லாமல் கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை நடக்கும்.

இந்த நிலையில் நாம் போய் உட்கார்ந்து விடுகிறோம் என வைத்துக் கொள்வோம். அல்லது கையைப் பிசைந்து கொண்டு உள்ளே நிற்கிறோம். சட்டென வெளியே வரும் கணவனின் கேள்வி என்னவாக இருக்கும்? வாங்க! எப்போ வந்தீங்க என்றா? இருக்கவே இருக்காது இவ்வளவு நேரமா இங்கேயா இருந்தீங்க? என்று தான் கேட்பார். நமக்கோ முகத்தை எப்படி வைத்துக் கொள்வது என்று தெரியாமல் போய்விடும். இதெல்லாம் தவிர்க்கலாம் அல்லவா? குறைந்த பட்சம் நம்மைத் திட்டிக் கொண்டிருந்தால் அதையாவது நிறுத்தித் தொலைப்பார்களே. இதைப் போய் நம் காதில் வாங்கிக் கொள்வானேன்?

சிலர் கவலைப்படுத்துகிற மாதிரி மணியடிப்பார்கள். கதவைத் தட்டுவார்கள். அப்படிச் செய்யக் கூடாது. நகத்தால் லேசாகத் தட்ட வேண்டும். விரல்களை மடித்துக் கொண்டும் தட்டலாம். பதில் கிடைக்காவிட்டால் ஒலியை மெல்ல உயர்த்தலாமே தவிர, பொற்கைப் பாண்டியன் மாதிரித் தடதட வென்று தட்டி விடக் கூடாது.

இத்தகைய சிறு சிறு விடயங்களிலும் நாம் கவனம் செலுத்தி நடந்து கொண்டால் பலரும் நம்மை விரும்பத் தொடங்குவார்கள்.

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

## சபாஷ் பூக்குட்டி!

...என்ன சொல்லு? என்றார் இவர்.

டிராஃபிக் பொலிஸ் பிடிச்சிட்டானா தாத்தா.? முகத்தில் கலவரம்.

பிடிச்சா என்ன? தெரியாமத் தானே போயிட்டேன் வேணும் என்றா போனேன்.?

அதைப்படித் தாத்தா பொலிசுக்குத் தெரியும். குழந்தை விடாமல் கேட்டது.

தெரியாதுதான் அதான் கூப்பிட்டான் என்றார் இவர்.

ஐயய்யோ அப்புறம்? பயந்தவாறே அஸ்வினி இவரின் கையைப் பற்றிக் கொண்டது.

இங்குதான் குழந்தைக்கு நல்லது சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டார் ராம்கி. எப்படியாவது ஒரு நல்லதைப் புகுத்தி தன்னால் அதற்கு ஒரு கதை சொல்லிவிட முடிகிறது.

அதன் மூலம் நல்ல எண்ணங்களை அதன் மனதில் விதைக்க முடிகிறது. சுவாமி விவேகானந்தர் சொன்னது போல் இப்பொழுதே அதன் மனதில் நல்ல விஷயங்களாய்ப் போட்டு நிரப்பி விட்டால் பிறகு கெட்ட, தவறான விஷயங்களோ, எண்ணங்களோ மனதில் உதிக்க வாய்ப்பில்லையல்லவா? இந்த மட்டுக்கும் இம்மாதிரி ஒரு நல்லது செய்வதற்காவது பையனும், மருமகளும் தனக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்களே என்று எண்ணி ஆறுதல் பட்டுக் கொண்டார்.



குழந்தை இவரையே பார்த்துக் கொண்டிருந்தது. தாத்தா மேற்கொண்டு சொல்லாமல் நிறுத்திவிட்டது அதை மேலும் கலவரப்படுத்தி விட்டதோ என்னவோ?

ஏன் தாத்தா பேசாம இருக்கே? பொலிஸ்காரர் திட்டினாரா? என்றாள் அஸ்வினி.

திட்டினாராவா? எதுக்காகத் திட்டணும்? நான்தான் தப்பு தான், தெரியாம வந்துட்டேன்னுதானே சொன்னேன் எதுக்காகத் திட்டுகிறார்? முழிச்சுப் போனாராக்கும்? என்றார் இவர்.

குழந்தை சிரித்தது. இவர் தொடர்ந்தார்.

எங்கேயுமே உண்மையை ஒத்துக்கொண்டோம் என்றால் அதுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம்டா கண்ணு. அடாவடி பண்ணினாத்தான் தப்பாக்கும். அதை நல்லாத் தெரிஞ்சிக்கோ.

அடாவடின்னா?

குழந்தை இப்படிக் கேட்ட பின்புதான் ஏன் அந்த வார்த்தையைச் சொன்னோம் என்றிருந்தது இவருக்கு. அந்தந்த வயது வரும்போது, சமூகத்தோடு கலக்கும்போது தானாகவே தெரிந்துவிட்டுப் போகிறது எதற்காக இப்பொழுது? ஏதோ தப்புச் செய்து விட்டது போல் உறுத்தல் ஆனாலும் அதை மேற்கொண்டு காட்டிக் கொள்ளாமல் தொடர்ந்தார்.

உண்மைக்கு எங்கயுமே மரியாதையும் மதிப்பும் அதிகம்டா ராஜாத்தி.. மகாத்மாகாந்தி உண்மையே பேசின அரிச்சந்திர மகாராஜாவைத் தானே தனக்கு வழிகாட்டியா எடுத்தார்.

உனக்குச் சொல்லியிருக்கிறேன். உண்மைக்கு இருக்கிற சக்தி அப்டி அது நெருப்பு மாதிரின்னு வச்சிக்கயேன்.. நாம் பேசுவது உண்மையாயிருந்தா நம்மகிட்டருந்து வார்த்தைகள் தடங்கல் இல்லாம, பளிச்சின்னு வெளிவரும். இல்லையென்றால், அதாவது பொய்யிருந்திச்சுன்னு வச்சிக்கோ, வாய் உளரும். வார்த்தைகள் தடுமாறும்.

அதுவே நாம் பேசுவது பொய் என்று காட்டிக் கொடுத்திடும் ஆகையினால் எங்கு என்றாலும் நாம் தப்பித் தவறி ஒரு தப்போ, தவறோ செய்திட்டாலும், அதை ஏற்றுக்கொள்ளனும் தைரியமா ஏற்றுக்கொள்கின்ற மனதை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் அது நேர்மையோட அடையாளம் அந்த நேர்மை தான் நம்மை என்றும் வாழ வைக்கும். மேற்கொண்டு தவறுகளைச் செய்யமாட்டோம் தெரிஞ்சுதா? சொல்லிவிட்டு குழந்தை முகத்தையே உற்றுப் பார்த்தார் ராம்கி. (தொடரும்)

10-2016 28

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 306 - மாக்செண்டியஸ் ரோமப் பேரரசன் ஆனான்.
- 312 - முதலாம் கொன்ஸ்டண்டீன் மாக்செண்டியசைத் தோற்கடித்து ரோமப் பேரரசனானான்.
- 1492 - ஸ்பெயின் நாட்டுக் கடலோடியான கொலம்பசும் அவரது கூட்டத்தினரும் வழி தவறிச் சென்று கியூபாவில் கரை இறங்கினர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பொஸ்டனில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதை பிரித்தானியா தடுத்தது.
- 1834 - சுவான் ஆற்றுக் குடியேற்றத்தில் (தற்போதய மேற்கு அவுஸ்திரேலியாவில்) பழங்குடிகளுக்கும் ஆங்கிலேயக் குடியேற்ற வாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பல பழங்குடியினர் கொல்லப்பட்டனர்.
- 1886 - நியூயோர்க்கில் அமெரிக்க ஜனாதிபதி குரோவர் கிளீவ்லாண்ட் விடுதலைச் சிலையைத் திறந்து வைத்தார்.
- 1918 - மேற்கு கலீசியாவில் புதிய போலந்து அரசு அமைக்கப்பட்டது.
- 1922 - முசோலினி தலைமையில் இத்தாலிய பாசிஸ்டுகள் உரோம் நகரை சென்றடைந்து இத்தாலிய அரசைக் கைப்பற்றினர்.
- 1941 - லித்துவேனியாவின் கௌனாஸ் என்ற இடத்தில் நாசி ஜேர்மனியர் 9,000 யூதர்களை சுட்டுக் கொன்று அதே இடத்தில் புதைத்தனர்.
- 1942 - கனடா முதல் அலாஸ்கா வரையான அலாஸ்கா நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது.
- 1948 - சுவிட்சர்லாந்து இயற்பியலாளர் போல் முல்லர் டிடிரியைக் கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசு பெற்றார்.
- 1962 - கியூபாவிலிருந்து சோவியத் ஏவுகணைகளை அகற்றுவதாக சோவியத் தலைவர் நிக்கிட்டா குருஷேவ் அறிவித்தார்.
- 1971 - ஐக்கிய இராச்சியம் தனது முதலாவது (2007 வரை ஒன்றே ஒன்றுமான) "புரொஸ்பெரோ" என்ற செய்மதியை விண்ணுக்கு ஏவியது.
- 1972 - முதலாவது ஏர்பஸ் யு300 பறக்கவிடப்பட்டது.
- 1985 - சண்டினீஸ்டாவின் டானியேல் ஒர்ட்டேகா நிக்கராகுவாவின் ஜனாதிபதியானார்.
- 1985 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.
- 2001 - பாகிஸ்தானில் கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்து தீவிரவாதிகள் கண்முடித்தனமாக சுட்டதில் பெண்கள் உள்பட 16 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - கேரளாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக நாகர்கோயில் பகுதியில் இலேசான நில அதிர்வு ஏற்பட்டது.
- 2006 - 1930களில் ரஷ்யக் கம்யூனிஸ்டுகளால் உக்ரேனின் பிகீவ்னியா காட்டில் கொலை செய்யப்பட்ட 817 உக்ரேனியர்களினது இறுதிக் கிரியைகள் அவர்கள் கொலை செய்யப்பட்ட இடத்தில் இடம்பெற்றன.
- 2006 - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையே 8 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் ஜெனீவாவில் மீண்டும் ஆரம்பமாயின.

### பிறப்புக்கள்

- 1955 - பில் கேட்ஸ், மைக்ரோசாப்ட் நிறுவனர், கணிப்பொறி மென்பொருள் வல்லுனர்.
- 1956 - மஹ்மூத் அஹ்மதிநெஜாத், ஈரான் குடியரசுத் தலைவர்.

### இறப்புகள்

- 1627 - ஜஹாங்கீர், இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னன் . (பி. 1569)
- 1704 - ஜான் லாக், ஆங்கிலேய தத்துவவியலாளர். (பி. 1632)
- 1900 - மாக்ஸ் முல்லர், ஜேர்மனிய மொழியியலாளர் . (பி. 1823)
- 1937 - மைசூர் வீ. துரைசுவாமி ஐயங்கார், கருநாடக இசை வீணை வாத்தியக்கலைஞர்.(பி. 1920)
- 2014 - மைக்கேல் சாட்டா, சாம்பியாவின் அரசுத்தலைவர். (பி. 1937)

### சிறப்பு நாள்

- செக் குடியரசு, சிலவாக்கியா - தேசிய நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 50 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 50 | 80 | 120 | 80 |
| தக்காளி | 60 | 100 | 40 | 50 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 | 60 | 80 | 50 |
| கோவா | 70 | 60 | 60 | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 120 | 70 | 80-140 | 160 | 80 |
| பூசணி | 30 | 40 | 20 | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 | 100 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 85 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 250 | 100 | 160 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 100 | 200 | 100 | 100 | 160 | 140 |
| லீக்ஸ் | 140 | 200 | 100 | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 50 | 50 | 100 | 80 |
| கறிமிளகாய் | 150 | 100 | 100 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 30 | 60 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 170 | 180 | 200 | 180 |
| கத்தரிப் பிஞ்சு | 40 | 50 | 30 | 50 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 25 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 500 | 600 | 500 | 600 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-35 | 45 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | -- | — | 180 |
| வெங்காயப்பூ | 120 | — | — | — | 160 | 200 |
| முள்ளங்கி | 60 | — | 35 | 40 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 30 | — | 10 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | - | 100 | - |

# மாணவர்களுக்கு அநீதி இழைப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் வெளிவாரி ஊடாக பட்டப்படிப்பை மேற்கொள்ள எதிர்பார்க்கின்ற மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு வெளிவாரி பட்டப் படிப்பில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் களனி பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட போதிலும், இந்த ஆண்டு வெறும் 2 ஆயிரம் மாணவர்களுக்கே சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் இந்த முறைப்பாட்டை பதிவு செய்தனர்.

இலங்கையில் சுதந்திரக் கல்வித் திட்டம் நடைமுறையில் இருக்கின்ற நிலையில், வெளி வாரியாக பட்டப் படிப்பை மேற்கொள்ள இருக்கும் சுதந்திரத்தை மறுப்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிவாரியாக பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க எடுத்துள்ள தீர்மானம், சுதந்திரக் கல்விக்கு விடுத்த ஒரு சவாலாகவே அமைந்துள்ளது என்றும் மாணவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இந்த விடயம் தொடர்பில் வெளி வாரிப் பட்டதாரிகள் சங்கம் இணைப்பாளர் மேலும் கருத்து தெரிவிக்கையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விடுத்துள்ள இந்த சுற்று நிருபத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்காக உள்வாங்கப்படுகின்ற மாணவர்களின் தொகையை உள்ளக மாணவர்களின் தொகைக்கு சமப்படுத்தியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு வெளிவாரிப்பட்டப்படிப்பில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் களனி பல்கலைக்கழகத்தில் பதிவாகிய போதிலும், இம்முறை வெறும் 2000 மாணவர்களுக்கே சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

எனவே இவ்வாறு பெருமளவில் தொகை குறைப்பின் அடிப்படைக் காரணம் என்ன என்பதை மானியங்கள் ஆணைக்குழுவிடம் நாங்கள் கேட்கின்றோம். விண்ணப்பம் கோரும்போது அதில் இவ்வாறு கூறப்பட்டிருக்கவில்லை. இலங்கையில் கல்விக்கான சுதந்திரம் காணப்படுகிறது.

எனினும் இந்த நடவடிக்கையானது சுதந்திரக் கல்விக்கு விடுத்த ஒரு சவாலாகவே அமைந்துள்ளது. வெளிவாரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு காரணம, தனியார் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அதிகளவில் உள்வாங்கவே என்று உயர்கல்வி அமைச்சர் வெட்கமின்றி கூறியிருக்கின்றார்.

எனவே எமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் அளிக்கவில்லையாயின் நாங்கள் ஆட்சியை கவிழ்ப்பதற்கும் போராடுவோம் என்றார். (இ-7)

## மாதுறு ஓயா வலதுகரை அபிவிருத்தி திட்டத்துக்கான உடன்படிக்கை கைச்சாத்திடல்

அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்ட மாதுறு ஓயா வலதுகரை அபிவிருத்தி திட் டத்தின் நிர்மாணப் பணிகளுக்கான உடன்படிக்கை நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

அத்திட்டத்துக்கான நிர்மாண ஒப்பந்ததாரரான சீனாவின் CAME பொறியியல் கம்பனியின் தலைவி Luo Yan அம்மையார் மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரட்ன ஆகியோருக்கிடையில் இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

புத்தெழுச்சிபெறும் பொலநறுவை செயற்றிட்டத்தின் கீழ் புதிய திட்டமாக எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இத் திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. அவ் வேலைகள் 2020 நிறைவு செய்யப்பட்டு மக்களுக்கு உரித்தளிக்கப்பட்டது.

சீன எக்சிம் வங்கியின் நூற்றுக்கு நூறுவீத கடனுதவியில் அமுல்படுத்தப்படும் இத்திட்டத்தின் செலவு மதிப்பீடு 6969 மில்லியன் ரூபா ஆகும்.

1982 ஆம் ஆண்டில் மாதுறு ஓயா இடதுகரை அபிவிருத்தி செய்யப்பட்டது. அக்காலத்தில் நிலவிய பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக வலதுகரையின் அபிவிருத்தி பணிகள் கைவிடப்பட்டன.

வலது கரையின் அபிவிருத்தி திட்டத்துடன் புதிதாக 39ஆயிரம் ஹெக்ரேயர் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன் மதகு ஆனது இரண்டு கன மீற்றரால் உயர்த்தப்படவுள்ளது.

அதற்கமைய மேலதிக நீர்க் கொள்ளளவு 229 கன மீற்றரால் அதிகரிக்கும். இந்த அபிவிருத்தித் திட்டத்துடன் 83 கி.மீ.பிரதான வாய்க்கால்களும் 900 பகிர்வு வாய்க்கால்களும் பிரதேசத்தின் வீதிக் கட்டமைப்பும் அபிவிருத்தி செய்யப்படும்.

திட்டத்தினால் 12 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நன்மை பெறுவதுடன் பிரதேசத்தில் சீனித் தொழிற்சாலையொன்றும் நிர்மாணிக்கப்படும். அதற்காக முதலீட்டாளர்களை அரசாங்கம் அழைக்கவிருக்கிறது. தொப்பிகல மற்றும் கிழக்கு கடற்கரையை அண்மித்ததாக இருத்தல் காரணிகளால் அத் திட்டத்துடன் இணைந்ததாக இயற்கைச் சுற்றுலா துறையையும் மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7-10)

## பொதுக்கூட்டம்

மாதகல் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாதகல் நீர்த்தாங்கிக்கு அருகிலுள்ள மாதகல் நலன்புரிச்சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மாதகலைச் சேர்ந்தோர் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் 2016 ஆம் ஆண்டிற்கான சந்தாவைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறு தலைவர் வி.சிற்றம்பலம் அறிவித்துள்ளார். (இ-3-87)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 873

ராதை





வசந்தகுமார்




காயத்திரீ




நிதிபா



யதீஸ்சன்




றொகான்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நோய்ப் பாதிப்பால் நடக்க முடியாதவர்களுக்கு நண்பனாகும் ரோபோ; விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(பீஜிங்)

நடக்க முடியாதவர்களுக்கு நடப்பதற்கு உதவும் ரோபோ ஒன்றினை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

பக்கவாதம் மற்றும் தண்டுவட நோயால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் கஷ்டப்படும் நோயாளிகளுக்கு நடக்க உதவி செய்யும் ரோபோ ஒன்றினை சீனாவின் பெய்காங் பல்கலை ஆராய்ச்சியாளர்களும் டென்மார்க்கில் உள்ள ஆல்போர்க் பல்கலை ஆராய்ச்சியாளர்களும் இணைந்து கண்டுபிடித்துள்ளனர்.

அணிந்து கொள்ளக்கூடியது

விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோவானது இயற்கையான முழங்கால் அசைவுகளை ஏற்படுத்தி நடக்க முடியாதவர்கள் யார் உதவியும் இல்லாமல் நடக்க உதவக்கூடியவை. இவற்றால் ஓரளவு நடக்க முடிந்தவர்கள் பயிற்சியும் பெற முடியும். இந்த ரோபோக்கள் இடுப்புக்கு கீழே அணிந்து கொள்ளும் வகையில் விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.

முழங்கால் மூட்டு

மனிதன் நடப்பதற்கு மிகவும் உதவியாக இருப்பது முழங்கால் மூட்டு என்பதை இந்த விஞ்ஞானிகள் நன்கு உணர்ந்துள்ளனர். எனவே முழங்கால் அசைவை ஏற்படுத்தக்கூடிய ரோபோவை பீஜிங் மற்றும் டென்மார்க் பல்கலை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். அதேநேரம் பாதிக்கப்பட்டவர்கள் உறுதியாக நிற்கும் வகையிலும் இந்த வகை



ரோபோக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. (இ-7)

# சசிகலா புஷ்பா எம்.பியை கைது செய்ய தடைவிதிப்பு



(மதுரை)

பெண் சட்டத்தரணி வீடு தாக்கப்பட்ட வழக்கில் சசிகலா புஷ்பா எம்.பியை கைது செய்ய மதுரை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா புஷ்பா எம்.பி., அவருடைய குடும்பத்தினர் மீது நெல்லை மாவட்டம் திசையன் விளை அருகே உள்ள ஆனை குடியைச் சேர்ந்த 2 பெண்கள் பாலியல் புகார் அளித்தனர். இந்த வழக்கில் புகார் கூறிய பெண்களுக்கு ஆதரவாக திசையன்விளை பெண் சட்டத்தரணி சுகந்தி ஜெய்சன் ஆஜரானார்.

இந்நிலையில், சுகந்தி ஜெய்சன் கொச்சிக்கு சென்றிருந்த போது திசையன் விளையில் உள்ள அவரது வீட்டின் மீது மர்மநபர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதுதொடர்பாக திசையன் விளை பொலிஸார், சசிகலா புஷ்பாவின் ஆதரவாளர்கள் ஹரி, ராமலிங்கம், சித்ராகுமார் ஆகியோரை கைது செய்தனர். இந்த சட்டத்தரணி முன்பிணை கேட்டு சசிகலா புஷ்பா, அவருடைய கணவர் லிங்கேஸ்வர திலகன், மகன் பிரதீப்ராஜா ஆகியோர் மதுரை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தனர். இந்த மனு நீதிபதி பி.கோகுல்தாஸ் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதி, விசாரணையை எதிர்வரும் 2ஆம் திகதிக்கு தள்ளி வைத்தும், அதுவரை இந்த வழக்கில் சசிகலா புஷ்பா எம்.பி, அவருடைய கணவர், மகன் ஆகியோரை கைது செய்யத் தடை விதித்தும் உத்தரவிட்டார். (இ-7)

# மலேசியாவிலிருந்து திருச்சி வந்த விமானத்தில் 1 1/2 கிலோ தங்கம் மீட்பு

## பயணி கைது

(திருச்சி)

மலேசியாவில் இருந்து திருச்சி வந்த விமானத்தில் பயணியிடம் ரூ.50 இலட்சம் கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருச்சியில் இருந்து டுபாய், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் தினமும் ஏராளமான பயணிகள் திருச்சி விமான நிலையத்திற்கு வருகின்றனர். அவர்கள் அனைவரும் தீவிர சோதனை செய்யப்பட்ட பிறகே வெளியே அனுப்பப்படுகின்றனர்.

இந்த நிலையில் வெளிநாடுகளில் இருந்து திருச்சி விமான நிலையம் வழியாக தங்கம் கடத்தி வரும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. இதனை தடுக்க அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். இருப்பினும் தங்கம் கடத்தி வரும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணிக்கு மலேசியாவில் இருந்து திருச்சிக்கு ஏர் ஏசியா விமானம் வந்தது. அதில் வரும் பயணி, தங்கம் கடத்தி வருவதாக மதுரை வான் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து திருச்சி விமான நிலையத்திற்கு விரைந்து சென்ற அதிகாரிகள், மலேசியா விமானத்தில் வந்த பயணிகளிடம் தீவிர சோதனை மேற்கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பகுதியைச் சேர்ந்த மதுவன்ராஜா என்பவரின் உடைமைகளை சோதனை செய்த போது, அவர் கொண்டு வந்திருந்த ரோச் லைட்டில் ஒரு கிலோ 600 கிராம் தங்கக்கட்டிகளை மறைத்து வைத்து கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவரை அதிகாரிகள் கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. பறிமுதல் செய்யப்பட்ட தங்கக்கட்டிகளின் மதிப்பு ரூ.50 இலட்சம் இருக்கும் என அதிகாரிகள் கூறினர். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## பிரிந்த நண்பர்கள் சேர்ந்தனர்; எம்.ஜி.ஆரை வைத்து 16 படங்கள் எடுத்தார் தேவர்

285

இதன் காரணமாக ஒரு படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகும் அன்றே, அது ரிலீஸ் ஆகும் திகதியையும் தேவர் அறிவித்து விடுவார். அதே திகதியில் படம் நிச்சயம் ரிலீஸ் ஆகிவிடும்.

பக்திப் படங்கள்

தேவர் படங்களிலேயே எம்.ஜி.ஆர்.நடித்துக்கொண்டிருந்த போது சில பெரிய படக் கம்பனி அதிபர்கள் எம்.ஜி.ஆரை அணுகி தங்களுடைய படங்களிலும் நடிக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கும் கால்ஷீட் கொடுக்க வேண்டிய கட்டாயம் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டது. எனவே எம்.ஜி.ஆர்.இல்லாமல் சில படங்களைத் தயாரிக்க தேவர் முடிவு செய்து அதற்கென்றே தண்டாயுதபாணி பிலிம்ஸ் என்ற படக் கம்பனியைத் தொடங்கினார். இந்தப் படக் கம்பனி சார்பில் பல்வேறு படங்கள் தயாரிக்கப்பட்டாலும் பக்தி கலந்த சமூகப் படங்கள் பெரிய வெற்றி பெற்றன.

இவற்றில் ஏவி.எம்.ராஜன், சௌக்கார் ஜானகி நடித்த துணைவன் (1969), ஜெமினிகணேசன், கே.ஆர்.விஜயா நடித்த தெய்வம் (1972), சிவகுமார், ஜெயசித்ரா நடித்த வெள்ளிக்கிழமை விரதம்(1974) ஆகியவை மாபெரும் வெற்றிச் சித்திரங்கள்.

தெய்வம் படத்தில் பக்தர் பிரமுகர் கிருபானந்தவாரியார் நடித்தார். குன்னக்குடி வைத்தியநாதன் இசை அமைப்பில் பெங்களூர் ரமணி அம்மாள், மதுரை சோமு, டி.எம்.சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன் ஆகிய இசைக் கலைஞர்கள் பாடினார்கள்.

எம்.ஜி.ஆர். சுடப்பட்ட போது

எம்.ஜி.ஆருக்கும் தேவருக்கும் இருந்த நட்பு ஆழமானது. எம்.ஜி.ஆர். துப்பாக்கியால் சுடப்பட்டு வைத்தியசாலையில் இருந்த போது அவர் பிழைத்து வீடு திரும்புவாரா? மீண்டும் படங்களில் நடிப்பாரா? என்று பட அதிபர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த போது தேவர் அகஸ்தியர் கோவிலில் பூஜை செய்து விட்டு பிரசாதத்தை எம்.ஜி.ஆரிடம் கொண்டு போய் கொடுத்து முருகா! என் அடுத்த படத்தில் நீங்கள் தான் நடிப்பீர்கள். இதோ அட்வான்ஸ்! என்று கூறியபடி இலட்சக் கணக்கில் பணம் கொடுத்து விட்டு வந்தார்.

தேவரின் அன்பைக் கண்டு



மனம் நெகிழ்ந்தார் எம்.ஜி.ஆர். சின்னப்ப தேவர் தயாரித்த இந்திப்படமான ஹாத்தி மேரா சாத்தி (யானை என் தோழன்)


25 வாரங்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது.

எம்.ஜி.ஆரை வைத்து பல வெற்றிப்படங்களையும் மற்ற நட்சத்திரங்களை வைத்து அருமையான பக்திப் படங்களையும் தயாரித்து வந்த சின்னப்ப தேவருக்கு இந்திப்படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

எஸ்.எஸ்.வாசன், ஏவி.மெய்யப்ப செட்டியார் போன்ற ஸ்டுடியோ அதிபர்களால் தான் அந்திப் படங்களை வெற்றிகரமாகத் தயாரிக்க முடியும். நமக்கு ஏன் விஷப்பரீட்சை? என்று அவர் தம்பியும் டைரக்டருமான எம்.ஏ.திருமுகம் கூறினார்.

இந்திப்படம் தயாரிக்க நினைப்பது பணம் சம்பாதிப்பதற்காக அல்ல அதை ஒரு கௌரவமாக நினைக்கிறேன். முருகன் இருக்கிறான் அவன் வெற்றி தேடித்தருவான் என்றார் தேவர். (தொடரும்)

# பாதுகாப்பு படையினருக்கு முறையான பயிற்சிகளை வழங்க வேண்டும்-சுசில்



பாதுகாப்பு படையினருக்கு முறையான பயிற்சிகளை வழங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில,

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் நடந்து கொண்ட விதம் முற்றிலும் தவறானது. யுத்த காலத்தில் தேவையின் நிமித்தமாக பாதுகாப்பு படைக்கு சரியான பயிற்சி இன்றி பலர் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

எனினும் தற்போது எமக்கு அவர்களை பயிற்றுவிப்பதற்கான தேவையான கால அவகாசம் காணப்படுகிறது.

இப்போது நாம் அவர்களை பயிற்றுவித்து பாதுகாப்பு படைக்கு தகுதியானவர்களாக மாற்ற வேண்டும் என சுட்டிக்காட்டினார்.

மேலும் தற்போதைய நிலைமையின் அடிப்படையில் பாதுகாப்பு படையில் உள்ளவர்களுக்கு மன ரீதியானதும், உடல் ரீதியானதுமான பயிற்சிகளை கட்டாயம் அளித்தாக வேண்டும் என சுசில் பிரேமஜெயந்த மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

# முயன்றால் முடியாதது ஏது?

**வடமாகாண கல்வித் திணைக்களத்தால் உலக உளநல நாளை முன்னிட்டு 'சோதனைகளைத் துடைத்தெறிந்து சாதிக்கத் துணையிருப்போம்' எனும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட விழிப்புணர்வு செயற்றிட்டங்களை வெளிக்கொணரும் வகையில் இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். எம்மால் அறவே முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக் கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கூட்டாயம் வெற்றி அடைய முடியும். அது எமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும். எந்தக் காரியமும் ஆரம்பிக்கும் போது மலைப்பாகத்தான் தோன்றும். குழந்தைகள் கூட நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் விழுந்து எழுந்துதான் நடை பயிலுகின்றன. கீழே விழுகின்றோமே என்று அவர்கள் முயற்சிக்காமல் விடுவதில்லை. விடாமுயற்சி மட்டும் இல்லாவிட்டால் பல சாதனைகள் நிகழ்ந்திருக்க மாட்டாது. தோமஸ் அல்வா எடிசன் மின் குமிழை கண்டு பிடித்ததும் முயற்சியால். அதுமட்டுமல்ல மார்க் கோனி வானொலியைக் கண்டுபிடித்ததும் முயற்சியால். ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டு பிடித்ததும் முயற்சியால். ஏன் இவ்வளவு இருந்தும் இப்பொழும் நாம் பயன்படுத்தும் நவீன மின் உபகரணங்களை கண்டு பிடித்ததும் முயற்சியால். முயற்சி செய்தால் முடியாதது என்று எதுவுமில்லை. தோமஸ் அல்வா எடிசன் சொல்கிறார் ஒரு தோல்வி ஏற்பட்டாலும் மேலும் முயற்சி செய்யாமல் இருப்பது எமது பலவீனமே. இன்னுமொரு முறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம் தான் வெற்றிக்கு வழிவகுக்கும் என்று. புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிசங்களை எம்மால் அறிய முடியும். நாம் எல்லாம் படித்து முடித்து விட்டோம் என்று எண்ணுவது சுலபம். ஆனால் கற்றது கைம்மண்ணளவு தான் என்று புத்தகச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்டத்தான் புரியும். ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளை சந்தித்திருக்கிறார்கள்.

அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரப் புகழ் பெறுவதற்கு முன்னால் எத்தனை முறை தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்பதும் தெரியும்.

தோல்விகள் கதவை மூடும் போது தொடர்ந்து விடாமுயற்சியுடன் கதவைத் தட்டித் திறப்பது தான் வெற்றிக்கான சாவி. விடாமுயற்சியால் தான் இன்றும் பல சாதனையாளர்கள் எம் மனதில் இடம் பிடித்திருக்கின்றார்கள்.

ஒருமுறை கடலை நோக்கி மலை சொல்லியது. நான் உன்னை விடப் பலசாலி என்னை எவராலும் அழிக்கவும் முடியாது என்று. ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளில் கடலின் அலைகளாலும் மலை மறைந்தது. கடல் அலைகள் தொடர்ந்தன. ஓரிரு முறை தோல்வியை சந்தித்து விட்டால் துவண்டு விடாதே தோல்வி நிரந்தரம் அல்ல. தோல்வியுற்றால் அதில் உள்ள தவறை உணர்ந்து கொண்டு அதிலிருந்து மீண்டும் முன்னேறு!

ஆனால் ஒருபோதும் முயற்சி செய்ய மறக் காதே. இதனை மறவாமல் இருந்தாலே வெற்றி எமது காலடியில் சரணடையும். எமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடா முயற்சியோடு செயற்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். முயற்சி செய்யாது இருந்தால் வெற்றி ஒருபோதும் கிட்டாது.

ஒரு செயலை செய்யும் போது தோல்வி ஏற்பட்டால் அதனைக் கைவிடாமல் தொடர்ந்து போராடுங்கள். நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

இத்தகைய முயற்சியை மேற்கொண்டால் இலக்கை மிகவும் எளிதாக அடையலாம். முயற்சியே வெற்றியின் முதல் படியாகும். முயற்சி செய்தால் நிச்சயம் நீங்களும் சாதனையாளராகலாம் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

**பி.கனிமதி,தரம்-09**

# குடு ரொஷான் உள்ளிட்ட 11 பேரையும் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

மட்டக்குளி - சமித்புரவில் நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 11 பேரையும் இந்த மாதம் 31ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை செய்ய கொழும்பு மேலதிக நீதவான் அனுமதியளித்துள்ளார். கொழும்பு மேலதிக நீதவான் சந்தன கலங்கசூரிய இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நீதிமன்றத்திற்கு நேற்று விளக்கமளிக்கப்பட்டதையடுத்து, சம்பவம் தொடர்பில் மேலும் பல தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதால் நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

குறித்த சம்பவத்தின் சந்தேக நபர்களான குடு ரொஷான உட்பட்ட 11 பேர் இரத்தினபுரியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இந்தோனேசியாவில் மங்கள உடற்பயிற்சி



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தோனேசியாவில் நேற்றுக் காலை உடற்பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் என அந் நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உடற்பயிற்சியின் போது இந்தோனேசியாவின் வெளிவிவகார அமைச்சர் ரெட்னோ மருசுடி, அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிசொப் மற்றும் ஏனைய பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்திய பெருங்கடல் ரிம் சங்கத்தின் 16 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தோனேசியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு

வடமராட்சி அல்வாய் நல்லொழுக்க நிறுவனத்தின் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தலைவர் பா.இரகுநாதன் (ஜே.பி.) தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், விருந்தினர்களாக கரவெட்டி பிரதேசசெயலாளர் ச.சிவஸ்ரீ, வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் நா.சோதிநாதன், கரவெட்டி கோட்டக்கல்விப்பணிப்பாளர் க.யோகநாதன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி டாக்டர் க.சிவசுதன், நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் க.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

# 200 ஆவது ஆண்டு விழா

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினால் நடத்தப்படும் அமெரிக்கன் சிலோன் மிஷனின் 200 ஆவது ஆண்டு விழா நாளை 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழையில் அமைந்துள்ள அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் இடம்பெறும். (இ-3)

# அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது?

## ஆட்சியாளர்களே பதில் சொல்லுங்கள்

இலங்கைத் தீவின் ஆட்சியாளர்களே, அதிகார வர்க்கத்தினரே உங்கள் அரசியல் சதுரங்கத்தின் பகடைக்காய்களாக தமிழ் அரசியல் கைதிகளை இன்னும் எத்தனை காலங்கள் பயன்படுத்த போறீர்கள் கொடிய போர் முடிவுக்கு வந்து ஏழு ஆண்டுகள் ஆகியும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை இன்று வரை விடுதலை செய்யப்படாததன் காரணம் என்ன? நல்லிணக்கத்திற்கு வாருங்கள் ஒருமைப்பாட்டினை பேணுங்கள் என்று வெறும் அறிக்கைகள் விடுகின்ற நீங்கள் உண்மையிலே நல்லிணக்கத்தை விரும்புகின்றவர்களாக இருந்தால் ஏன் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கூடாது? இவர்களை விடுதலை செய்வதனால் என்ன பாதிப்பு ஏற்பட போகின்றது? பத்து, இருபது ஆண்டுகளாக இவர்கள் சிறையிலே தடுத்து வைககப்பட்டு வதைக்கப்படுகின்றார்கள்.

இவர்களின் விடுதலை எப்போது? அநீதியான முறையிலே இன்று வரைக்கும் இவர்கள் கொடிய சிறைகளிலே வதைக்கப்படுவது தமிழர்கள் மத்தியிலே பாரிய தாக்கத்தையும் ஒரு விரக்தியினையும் எற்படுத்துகின்றது. தமது விடுதலைக்காக பலமுறை அவர்கள் கோரிக்கை விடுத்தும், உண்ணாவிரதம் இருந்தும் அவர்கள் மீது நீங்கள் இரக்கம் காட்டாத காரணம் என்ன? ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் இருந்தே, பல தாக்குதல் சம்பவங்களில் பங்கெடுத்த கருணா, குமரன் பத்மநாதன் போன்ற இன்னும் பல முக்கியஸ்தர்களை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய முடியுமாயின் சிறு சிறு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் வெறும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்கள் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய முடியாததன் பின்னணி என்ன? இதற்கான பதிலை தர வேண்டிய பொறுப்பும் கட்டாயமும் இன்று உங்களுடையதே ஆட்சியாளர்களே பதில் சொல்லுங்கள்




வியாபார அரசியலில் பகடைக்காய்களாக இன்னும் எத்தனை காலங்கள் எந்த அரசியல் கைதிகளைப் பயன்படுத்தப் போகிறீர்கள். சிறைச்சாலைகளிலே பல்லாயிரம் குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ஒரு நிரபராதிகள் கூட அங்கே தடுத்து வைக்கப்படக்கூடாது என்று சட்டப் புத்தகங்கள் சொல்கின்றன. ஆனால் பூசாவிலும் வெலிக்கடையிலும் எத்தனை நிரபராதிகள் அநீதியான முறையிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் கைது செய்யப்பட்டு 24 மணித்தியாலயத்திலேயே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து நீதி மன்றத்திலேயே நிறுத்தப்பட வேண்டும் என்று சட்டம் சொல்கின்றது.

ஆனால் பத்து வருடங்களுக்கு மேலாகவும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாது நீதிமன்றிலே முன்னிலைப்படுத்தப்படாது எத்தனையோ தமிழர்கள் இன்று வரை தடுப்பு முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டிருப்பது அநீதியான ஒன்றே. நல்லிணக்கம் நல்லாட்சி என்று நீங்கள் கூறுவது வெறும் ஏமாற்று வித்தை என்பது இங்கே தெளிவுபெறுகின்றது. எனவே வெறும் மந்திர சொற்களால் தமிழர்களை இனியும் ஏமாற்றி அரசியல் இலாபம் தேடுவதை தவிர்த்து தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை உங்களுடையதே. எத்தனை ஆயிரம் தமிழர்களை படுகொலைக்கு காரணமான நீங்கள் ஒரு சிறிய பாவமன்னிப்புக்காக ஏன் இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கூடாது. நாம் செய்த தவறு என்ன? நாம் எதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் என்று தெரியாது. சிறைகளிலே வாடும் இந்த அப்பாவிகள் படும் வேதனைகளும் வருத்தங்களும் இன்னும் எத்தனை காலங்கள் நீடிக்கப் போகின்றது. குடும்பம், பிள்ளைகள் என்று சமூகத்திலே மகிழ்ச்சியுடன் வாழ வேண்டிய இவர்கள் உறவுகளை இழந்து ஒரு ஏக்கத்துடன் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். விசாரணை என்ற பெயரிலே அங்கே அரங்கேறும் மனிதாபிமானமற்ற செயல்கள் ஏராளம்.

இவற்றை எல்லாம் அனுபவித்தவன் என்ற வகையிலே அதன் வலிகளும் வேதனைகளும் எனக்கும் தெரியும். ஆம் தமிழ் பேசிய காரணத்திற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பூசாவதை முகாமிலே சிறுகாலம் எனது நாட்களும் நகர்ந்தன. எனவே அங்கே அரங்கேறும் அநீதிகளை எனது கண்களால் கண்டவன் அதை அனுபவித்தவன்.

ரி.ஐ.டி எனப்படும் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் விசாரணை என்ற பெயரிலே ஆபாசமாக பேசுவதும் தகாத வார்த்தைகளால் திட்டுவதும் எந்த சட்டத்தில் உள்ளது. நள்ளிரவு வேளைகளிலே விசாரணை என்று அழைத்துச் செல்லப்பட்டு அங்கே கேட்கப்படும் கேள்விகள் எத்தனை.

ஒவ்வொரு கேள்விகளுக்கும் ஒவ்வொரு அடி உடலாலும் மனதாலும் எவ்வளவு வேதனைகளை ஒரு மனிதனுக்கு கொடுக்க முடியுமோ அவை அனைத்துமே தமிழர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

மாற்றத்திற்கான அரசு என்றும் நல்லாட்சிக்கான அரசு என்றும் கொக்கரிக்கும் இன்றைய ஆட்சியாளர்களே! நீங்கள் செய்ய வேண்டியது பாரிய தியாகம் அல்ல குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யாது பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டவர்களை உடனடியாக நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்து குற்றம் நிருபிக்கப்பட்டால் இது வரை காலமும் அவர்கள் சிறையிலே தடுத்துவைக்கப்பட்ட அவர்களது தண்டனைக் காலமாக கருதி உடனே விடுதலை செய்யுங்கள். இனியேனும் அவர்கள் சிறிதுகாலம் குடும்பத்துடன் வாழட்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் என்னும் கொடிய அஸ்திரத்தினால் எத்தனை பட்டதாரிகளைப் படுகொலை செய்தீர்கள். எத்தனை ஆயிரம் தமிழர்களை சிறைப்படுத்தினீர்கள். தமிழர்களைப் பொறுத்தவரை சிறைச்சாலைகளோ, சித்திரவதைக் கூடங்களோ அவர்களை வதைக்குமே தவிர அவர்கள் சிந்தனையினை ஒரு போதும் சிதைக்காது. எனவே அநீதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள். நல்லிணக்கத்துக்கான சிறிது சமிக்ஞையினை காட்டுங்கள். பூசா தடுப்பு முகாமின் ஒரு சுவரிலே கரித் துண்டினால் எழுதப்பட்டிருந்த வரிகள்.

“சாதிக்க இருந்த சாதனைக்கும் முன்னேற இருந்த முயற்சி இளமை தந்த காதலுக்கும் காதல் கனவுகளுக்கும் விலங்கிட்டு பூட்டி கைதி என்று சிறையில் தள்ளியது இந்த சிங்கள அரசு.” இந்த வரிகளிலே உள்ள வேதனை அனுபவித்தால் மாத்திரமே உணர்ந்து கொள்ள முடியும்.

இனியும் உங்கள் அரசியல் சதுரங்க விளையாட்டினை இவர்கள் விடயத்திலே நிறுத்தி அனைத்து அரசியல் கைதிகளையும் “இவர்களும் மனிதர்கள்” என்ற அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டிய அவசியமும் தமிழ் மக்களின் வாக்குகளினால் இன்று அதிகாரத்தில் உள்ள ஆட்சியாளர்கள் என்ற வகையிலே இவர்களின் விடுதலைக்காக நியாயமான ஒரு முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பும் உங்களுடையதே.

ஆதி

ஒருவன் எப்பொழுதும் வீரனாகவே வாழ முடியாது. ஆனால் என்றைக்கும் மனிதனாக வாழ முடியும். - ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கில் நடக்கும் இழப்புகளுக்கு தெற்கில் எழும் நீதிக்குரல்

நாட்டில் ஓர் அமைதியின்மை நிலவுவது போன்ற உணர்வு மக்களிடம் எழுந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இந் நிலைமை, நல்லாட்சியின் எதிர்காலம் எப்படி ஆகும் என்ற கேள்விக்கு இடம்வைத்துள்ளது எனலாம்.

நாட்டில் ஓர் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது என்ற மனநிலையை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்தது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரை பொலிஸார் சுட்டுக்கொன்ற சம்பவமாகும்.

பொதுவில் வட மாகாணத்தில் நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தென்பகுதி மக்கள் கருசினை கொள்வதில்லை என்ற கருத்து நிலை இருந்து வந்தது. இதில் உண்மையும் உண்டு.

எனினும் 2009ஆம் ஆண்டு மே மாதம் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புப் போர் சிங்கள மக்களிடம் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்காரணமாக வடபுலத்தில் நடைபெறுகின்ற சம்பவங்கள் குறித்து தமது கருசினையை வெளிப்படுத்துவதில் சிங்கள மக்கள் ஆர்வமாக இருப்பது தெரிகிறது. இதற்குத் தகுந்த சான்று என எடுத்துக் கொள்வதற்கு இரண்டு விடயங்கள் உண்டு. அதில் ஒன்று, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் தோல்வி.

தமிழ் மக்களின் வாக்குகளே மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கியது என்ற உண்மைக்கு அப்பால், சிங்கள மக்களில் கணிசமானவர்கள் மகிந்த ராஜபக்ஷவை ஓரங்கட்டி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க நினைத்திருந்தனர்.

இந்த நினைப்புக்கு கால்கோளாக அமைந்தது வன்னிப்பெரு நிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பு என்பது மறுக்க முடியாத உண்மை.

அடிப்படையில் மனிதநேயம் உள்ள சிங்கள மக்கள் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தமிழ் மக்களுக்கு நடந்த நெட்டூரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன்காரணமாக அவர்கள் மகிந்தவின் ஆட்சியை வெறுத்திருந்தனர்.

தவிர, இரண்டாவது முக்கிய சான்றாக புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையின்போது தென்பகுதி பொது அமைப்புகளும் பொது மக்களும் கிளர்ந்தெழுந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியமையாகும்.

ஒரு மாணவிக்கு நடந்த கொடுமை என்பதற்கு அப்பால், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு தங்களின் அனுதாபத்தைக் காட்ட வேண்டும் என்ற மன நிலையோடு இருந்த சிங்கள மக்கள் மாணவி வித்தியாவின் படுகொலையை முன்னிறுத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த வெளிப்பாடுகள் காரணமாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவத்திலிருந்து யாழ்ப்பாண மக்களை ஆற்றுப்படுத்துவதற்காக இங்கு வந்து போனார்.

இவற்றின் மத்தியில் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கொலைதொடர்பில் தென்பகுதியில் கணிசமான எதிர்ப்பு எழுந்துள்ளமை மறுக்க முடியாத உண்மை.

இரண்டு பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் சுட்டது ஏன்? என்ன காரணம்? மோட்டார் சைக்கிளை இடைமறித்த போது அதனை நிறுத்தவில்லை என்பதற்காக அந்த மாணவர்களை சுடுவதா? இப்படியான கேள்விகளை எழுப்பியவர்கள் அனைத்துப் பல்கலைக்கழக அமைப்பைச் சார்ந்த சிங்கள மாணவர்கள் என்பது இங்கு நினைவுபடுத்துவதற்குரியது.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் கொலையுண்ட சம்பவத்துடன் தொடர்புபடுத்தி ஆவா குழுப்புக்கும் புலனாய்வுத்துறைக்கும் தொடர்பு உண்டா? என்று சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சரிடம் சிங்கள ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி மிகவும் முக்கியமானது.

எனவே வடபுலத்தில் நடந்த வன்மம்-இழப்பு தென்பகுதியில் ஓர் அமைதியின்மையை ஏற்படுத்துகிறது என்பது தெரிகிறது.

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வை தாமதிக்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் நல்லாட்சிக்கான நடைபாதை முட்களும் கற்களும் நிறைந்ததாகவே இருக்கும் என்பது உணரப்பட வேண்டும்.

# இதுவரை துலங்காத 'பெர்முடா முக்கோண வலய மர்மம்' இறுதியில் முழுமையாகவே துலக்கப்படலாம்

அமெரிக்காவின் மியாமி-புளோரிடா- பெர்முடா-சான் யுவான்-பியூரிட்டோ-ரீக்கா கடற்பிராந்தியங்களை இணைக்கும் முக்கோண வடிவக் கடல் வலயப் பகுதிகளை உள்ளடக்கும் இந்தப் பிரபல்யமான பெர்முடா முக்கோணவலய நீண்டகால மர்ம முடிச்சுக்கள் அவிழ்க்கப்பட்டு இறுதியில் அது சாதாரண ஓர் நிகழ்வு என்றளவிற்கு அது பற்றிய மர்மம் துலங்கப்பட்டு விடக்கூடும் என அமெரிக்க "நியூயோர்க போஸ்ட்" கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கையொன்றினை விடுத்திருந்தது.

புதிர் மிக்கதான இந்தக் கடற்பிராந்தியத்திற்கு மேலாக உருவாகும் அபூர்வமான அறுங்கோணவடிவ நிதிக் கூட்டங்களின் உள்ளார்ந்த செயற்பாடே இம்முக்கோண கடற்பிராந்தியத்தில் அதிசயமான முறையில் காணாது மறைந்து போகும் டசின் கணக்கிலான கப்பல்கள்-விமானங்கள் பற்றிய மர்மத்திற்கான விளக்கத்தைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

குறிப்பிடத்தக்கவிதமான புதிய கோட்பாட்டின்படி மேற்படி அபூர்வமான முகிற்கூட்டங்கள் 170 MPH உள் அழுத்தத்துடன் உருவாகும் காற்றழுத்தக் குண்டுகள் பலவற்றுடன் இடையிடையே தொடர்புபடுத்தப்பட்டவையாகவே ஏற்படுகின்றன. இந்தக் காற்றழுத்தக் குண்டுகளின் ஒருமித்த சக்தியானது வெடிப்பின் மூலம் வெளிப்படும் போதுவிமானங்களையோ, கப்பல்களையோ வீழ்த்தி நீருக்குள் உருவாகும் சுழிகளினூடாக கடலுக்குள் ஈர்த்துக்கொண்டு விடும். மேற்படி உருவாகும் முகிற்கூட்டங்கள் 20 மற்றும் 50 மைல்கள் அகலத்தில் நீர்ப்பரப்பின் மீது பல்வேறு இடைவெளிகளில் அபூர்வமான அறுங்கோண வடிவத்தில் உருவாகுவதாக வானவியல்-காலநிலை அவதானிப்பு நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

"முகிற்கூட்டங்கள் அறுங்கோண வடிவில் உருவாகும் நிகழ்வு பற்றிய செயற்கைக்கோள் மூல பிம்பங்களைப் பார்க்கும்போது அதை உண்மையில் முற்றிலும் அபூர்வமானவையாகவே தோன்றுகிறது" என வானிலை ஆராய்ச்சி நிபுணர் ரெண்டி செர்வனி என்பவர் கூறுகிறார்.

சமுத்திரத்தினுள் இறங்கும் இந்த அறுகோண வடிவங்களின் சிறிய காற்றுக் குமிழ்களின் வெடிப்பினால் பெரிய காற்றழுத்துக் குண்டுகள் உருவாகின்றன. இந்தக் காற்றழுத்தக் குண்டுகளின் பெருவெடிப்புக்களின் வலுவானது 170 MPH வேகத்தில் வீசும் சுழிக் காற்றின் வேகம் கொண்டவையாக இருப்பதால் மிகவும் எளிதாக விமானங்களை வீழ்த்தி சமுத்திரத்தினுள் கப்பல்களுடன் சேர்த்தே ஈர்த்துக்கொண்டு விடுவதாக தற்போது அறியப்படுகிறது.

நீண்டகாலமாகவே காரணங்கண்டு கொள்ளப்படாத மர்ம நிகழ்வுகளாகவே இருந்து வந்த இப்புதிருக்கான முடிச்சுக்கள் அவிழத் தொடங்கியது எனலாம்.

## வருடாந்த பரிசளிப்புவிழா இன்று

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் பி. அரவிந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். புஸ்பலிங்கம், சிறப்பு விருந்தினராக பரீட்சைத் திணைக்கள தலைமை அரச முகாமைத்துவ உதவியாளர் பி. அற்புதரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் பரிசில்களை திருமதி பி.புஸ்பலிங்கம் வழங்குவார். (இ-3-19)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் தெல்லிப்பழை சந்தை வீதி, தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வீதி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெலலிப்பழை மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மனனார் பிரதேசத்தில எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, பம்ப் ஹவுஸ் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பூஜை அறை அமைந்திருக்கும் முறை


பூஜை அறையை மெழுகி விட்டு சிறிது மஞ்சள் தண்ணீர் தெளிப்பது நல்லது. மணியடித்து பூஜை செய்வது நல்லது. நிவேதனம் செய்ய எதுவுமே இல்லாத போது, உலர்ந்த திராட்சை , கல்கண்டு போன்றவற்றை வைத்து பூஜை செய்யலாம்.

தெய்வ படங்களை கிழக்கு பார்த்து வைக்க வேண்டும, முடியாத போது வடக்கு பார்த்தும் வைக்கலாம். அறையில் வடமேற்கு மூலையில் பூஜை இடத்தை அமைப்பது வீட்டில் வாஸ்து தோஷம் இருந்தாலும் சரி செய்து விடும். தனியாக பூஜை அறை இல்லாத போது நம் தலைக்கு மேற்பட்ட உயரத்தில் சாமி மாடத்தை அமைப்பது நல்லது. எப்போது ஒரு சிறிய பாத்திரத்தில் நீர் சாமி மாடத்தில் இருப்பது நல்லது.

வீட்டில் அமைதியும் நிம்மதியும் செல்வவளம் இவை இருக்க பூஜை அறையை சிறிது கவனித்தால் போதும்.

சுவாமியின் இடதுபுறம் சாம்பிராணி காட்டும் தூபக்கரண்டியையும், வலதுபுறம் கற்பூரத்தட்டையும் வையுங்கள். இடதுபுறம் பழங்களையும், வலதுபுறம் பலகாரங்களையும் வையுங்கள். தீர்த்தம் பருகிய பிறகு, மீதமுள்ளதை மறுநாள் காலையில் செடிகள், மரங்களில் கொட்டுங்கள். பூந்தொட்டி இருந்தால் அதில் விடலாம். தரையில் ஊற்றக்கூடாது. படங்களையும், பூஜைக்குரிய மேஜையையும் வாரம் ஒருமுறை துடையுங்கள். விளக்கை தினமும் தேய்த்தால் நல்லது. பெரிய விளக்காக இருந்தால், வாரம் இருமுறையாவது சுத்தம் செய்யுங்கள். வெறுமனே தீபதூபம் காட்டுவதை விட, கடவுளைக் குறித்த நாமங்கள், பாடல்கள், ஸ்லோகங்களை உச்சரித்தபடி காட்டுவதே உயர்ந்தது. பூஜை நேரத்தில், குடும்பத்தினர் எல்லாரும் பத்துநிமிடமாவது செலவழிக்க வேண்டும். கூட்டாக பாடல்களைப் பாடுவது, ஸ்லோகங்களைச் சொல்வது அதிக பலனைத் தரும்.

செவ்வாய், வெள்ளியில் தூபமிடுவது வீட்டிற்கு சுபமாகவும், விஷஜந்துக்கள் அண்ட விடாமலும் தடுக்கும். குங்கிலியம் சேர்த்து தூபமிடுவது விசேஷம். நெய், சந்தனம் தூபத்தில் சேர்ப்பது செல்வ வளம் தரும். தேங்காய் நார் சேர்த்து தூபமிட்டால் திருஷ்டி கழியும். சில சமயம் மழைக்காலத்தில் சளித்தொல்லைகள் கூடும் சமயத்தில் மஞ்சள் பொடியுடன் ஓமம் சேர்த்து தூபமிடலாம். குழந்தைகள் இருப்பவர்களும் இதை செய்தால் சளித்தொல்லை இருக்காது.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மகிழ்ச்சி

எந்த மனம் இன்பத்தைத் தேடி அலைகிறதோ, அதை மையத்திற்கு (ஆன்மாவிற்கு) கொண்டுவர இயலாது. நீ மையத்திலுள்ள போது எல்லா மகிழ்ச்சிகளும் எழிப்படியும் உன்னைத் தேடி வரும். ஆனால் அவற்றால் உன்னைக் கவர முடியாது. ஏனெனில் நீதான் கவர்ச்சியின் மூலம்.

இன்பத்தைத் தேடுபவனால் என்றும் உத்தம நிலையை அடைய முடியாது. நீ துக்கத்தில் மூழ்கியிருந்தாலும் உன்னால் மையத்திற்கு வரமுடியாது; அப் போது நீ ஞானப்பாதையிலிருந்து வெகுதொலைவில் இருக்கிறாய்.

இன்பத்தின் பின்னால் நீ ஓடுவதாயிருந்தால் சத்சங்கத்தை மறந்துவிடு. ஏன் நேரத்தை வீணாக்குகிறாய்? இதுதான் விடுதலையின் கலை (Art of leaving)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இனிமையாய்ப் பேசுங்கள்

❖ ஒருவர் நேர்வழி பெற்ற பின், வீண் தர்க்கம் செய்வதை விட்டுவிட்டால் அவர் ஒரு போதும் வழி கெடமாட்டார், ஏனெனில், இறைவனிடம் மிகவும் கோபத்திற்குரியவர்கள், வீண் தர்க்கம் செய்வதில் திறமைசாலிகளாக இருப்பார்கள்.

❖ ஒரு முஸ்லிமிற்கு ஆடைகளை இனாமாக கொடுத்தால், எதுவரை அந்த ஆடை, பெற்றுக் கொண்டவரின் உடலில் இருக்குமோ, அக்காலம் வரை இறைவனின் பாதுகாவல், கொடுத்தவருக்கு இருந்து கொண்டே இருக்கும்.

❖ வசதி இல்லாத ஒருவன் மனம் நொந்து உங்களிடம் உதவி கேட்டால் அவனை விரட்டாதீர்கள், கொஞ்சமேனும் கொடுத்து அனுப்புங்கள், அல்லது இனிய வார்த்தைகளால் பதில் சொல்லுங்கள்.

❖ எளிய ஆடை ஈமானுடைய அடையாளங்களில் ஒன்றாகும், எவன் புகழுக்காகவும், பகட்டுக்காகவும் ஆடை அணிகிறானோ அவனுக்கு கியாம நாளில் இழிவான ஆடையை அல்லாஹ் அணிவிக்கிறார்.

❖ யாராவது உன்னிடமுள்ள குறைகளைச் சொல்லி உன்னைத் திட்டினால், நீ அவனுடைய குறைகளை சொல்லி திட்டாதே!

# கொம்மாந்துறை இளைஞர் வி.க. அடுத்த சுற்றுக்கு தெரிவு



கைதடி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 ஓவர்கள் 8 பேர் கொண்ட மென்பந்து போட்டிக்கு கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதல் போட்டியில் ரொப் டெவின் விளையாட்டுக்கழகத்துடன் மோதியது கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம். முதலில் துடுப்பெடுத்தாடிய ரொப் டெவின் விளையாட்டுக்கழகம் 6 ஓவர்களில் 37 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக் கழகம் 2.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

இரண்டாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகத்துடன் போட்டியிட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம் 5.1ஓவர்களில் அனைத்து விக்கெட்டினை இழந்து 67 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் 5.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 34 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. (கு)

# ஹாட்லி கல்லூரி மாணவன் உயரம் பாய்தலில் முதலிடம்



47 ஆவது சேர் ஜோன் டார்பட் ஜூனியர் தேசிய தடகளப் போட்டியில் (Sir John Tarbat National Athletic Championship) பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் எஸ். மிதுனராஜ் 14 வயது கீழ் பிரிவில் உயரம் பாய்தலில் 1.65 மீற்றர் உயரம் பாய்ந்து முதலிடம் (தங்கப்பதக்கம்) பெற்றுள்ளார்.



# உதைபந்தாட்ட போட்டி

வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகமும், வல்வை சனசமூக சேவா நிலையமும் இணைந்து பருத்தித்துறை லீக்கின் அனுமதியுடன் செ.யோகச்சந்திரன் (pele) முன்னாள் சிதம்பரக் கல் லூரி அதிபர்) ஞாபகார்த்தமாக 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியானது 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியாக அமைகின்றது. (கு)

# இன்றைய போட்டி

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்ல[illegible] உதைபந்தாட்ட தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8மணிக்கு மின்னொளியில் நடைபெறவுள்ள போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் சென் லூசியஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்; ஜொலிஸ்ரார் அணி முதலிடம்

ஜோர்ஜ் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 7 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு 01.01.2016 இல் இருந்து இன்று வரை 156 கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன.

இதில் 63,20 ஓவர் கொண்ட போட்டிகளாகும். இந்த 63 போட்டிகளும் யாழ்.பிறிமியர்லீக் போட்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 63 போட்டிகளுக்கும் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஜொலிஸ்ரார் அணி 13 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 54.54 புள்ளி களை பெற்று 1ஆம் இடத்தை கைப்பற்றியது.

திருநெல்வேலி சி.சி.அணி 12 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 46.81 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தையும் சென்றலைட்ஸ் அணி 8 போட்டிகளில் பங்குபற்றி 7 போட்டிகளில் வெற்றிபெற்று 37.87 புள்ளிகளை பெற்று3 ஆம் இடத்தையும் கைப்பற்றியுள்ளன. ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,

4.யாழ்.ஜொனியன்ஸ்-33.16 (08/06),
5.பற்றீசியன்ஸ் 27.55 (09/04)
6.யாழ்.சென்றல்-22.93 (06/04)
7.கே.சி.சி.சி.-20.68 (06/03)
8.கிறாஸ் கொப்பர்ஸ்-17.70 (06/02)
9. ஸ்கந்தாஸ்ரார்ஸ் -16.30 (06/02)
10. யூனியன்ஸ்-15.88 (06/01)
11.விக்டோறி -13.71 (04/02)
12.டிறிபேக்ஸ்ரார்- 13.53 (04/02)
13.அரியாலை சென்றல் -11.18 (03/02)
14.சிறிகாமாட்சி- 9.67(04/01)
15.ஓல்ட்கோல்ஸ்-9.35 (03/01)
16.ஹாட்லியைற்ஸ்- 9.04 (03/01)
17.நியூஸ்ரார்- 9.00 (03.01)
18.விங்ஸ் - 8.41 (03/01)
19.றெயின்போ 5.20 (03/01)
20.யங்ஸ்ரார்ஸ் - 4.87 (03/00)
21 ஸ்ரான்லி- 4.50 (03/00)
22.திருநெல்வேலி YMHA- 3[illegible]
(02/00)
(கு)

# மெலிஞ்சி முனை இருதயராஜா வி.கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## இறுதிப்போட்டியில் குறிஞ்சிக்குமரன்



மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் அரையிறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு நசரேத் மற்றும் குறிஞ்சிக்குமரன் அணிகள் பலப்பரீட்சையில் இறங்கின.

போட்டி ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் பரப்பை ஆக்கிரமித்தன. ஆனாலும் கோல் வாய்ப்புகள் வீணடிக்கப்பட்டன. சிறப்பான தடுப்பாட்டத்தில் இரு அணிகளும் முற்பாதியில் எதிரணிக்கு கோல் கணக்கை பூச்சியமாகவே ஆக்கின.

தொடர்ந்த இரண்டாம் பாதியிலும் தடுப்பாட்டமே தொடர்ந்தது. எனினும் சளைக்காமல் போராடிய இரு அணிகளாலும் எதுவித கோல்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. கோல் கணக்கு பூச்சியமாகவே ஆட்டம் நிறைவுற்றது.

வெற்றியை தீர்மானிக்கும் தண்ட உதை முடிவில் குறிஞ்சிக்குமரன் சார்பாக கோல் காப்பாளராக செயற்பட்டு அற்புதமான இரண்டு கோல்களை தடுத்து ரிதுஷன் (கோவிந்து) மூலம் 4:2 என்ற கோல் கணக்கில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

இருதயராஜ் தொடரின் போட்டிகளின் யாழ்.மாவட்டத்தின் பல முன்னணி கழகங்களை வீழ்த்தியதன் மூலம் இந்த இறுதிக்கு செல்லும் வாய்ப்பை குறிஞ்சிக்குமரன் பெற்றுக்கொண்டது. (கு)

## அவைத்தலைவர்...

பிரதி அவைத்தலைவர பதவி வழங்குவது என்பதில் அனைத்து உறுப்பினர்களும் ஒருமித்த கருத்துடன் இருக்கின்றார்கள். வடக்கு மாகாண சபை தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும். அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் விருப்பு வாக்குகளை அதிகம் பெற்ற உறுப்பினர்களுக்கு ஜனநாயக அடிப்படையில் பிரதி அவைத்தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும்.

மாறாக பொறுப்பற்ற தெரிவான வாக்கெடுப்பு தெரிவிற்குள் நான் வரவில்லை, வாக்கெடுப்புக்கு விட்டால் அது உறுப்பினர்களை இரண்டுபடுத்தும் செயற்பாடாக அமையும் ஆகவே வாக்கெடுப்புக்கு விட்டால் தான் அதிலிருந்து விலகுவதாக ரவிகரன் அறிவித்தார். இதன்போது முதலமைச்சரின் கோரிக்கையையும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும் முதலமைச்சர் தன்னோடு பேசவில்லை, தனியே அமைச்சர்களோடு மாத்திரமே பேசியுள்ளார் என அவைத்தலைவர் மீண்டும் கூறிவாக்கெடுப்பை நடத்தப்போவதாக அடம்பிடித்தார்.

**வேட்பாளர்கள் தெரிவு**

இதன் பின்னர் பல உறுப்பினர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பிரதி அவைத்தலைவர் தெரிவினை வாக்கெடுப்பின் மூலம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. வேட்பாளர் தேர்வில் க.வ.கமலேஸ்வரனை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் முன்மொழிந்தார். அதனை உறுப்பினர் ஆனோல்ட் வழிமொழிந்தார். பின்னர் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனை உ...பினர் சிவாஜிலிங்கம் முன்மொழிய அதனை உறுப்பினர் சர்வேஸ்வரன் வழிமொழிந்தார்.

எனினும் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட உறுப்பினர் ரவிகரன் முன்னர் கூறப்பட்டது போல தான் இவ்வாறு வாக்கெடுப்பிற்குள் வரவிரும்பவில்லை என கூறியதற்கு இணங்க அவருடைய பெயர் யாராலும் பிரேரிக்கப்படவில்லை. வேட்பாளர் தெரிவு முடிந்த நிலையில் பன்னிரண்டு மணிக்கு தேநீர் இடைவேளை என அறிவிக்கப்பட்டது. இடைவேளையின் போது வேட்பாளர்களுடனும் உறுப்பினர்கள் கூடிக் கூடி பேசினார்கள். சில இடத்தில் வாக்குவாதங்களும் இடம்பெற்றன.

...அரசு கட்சிக்குள்ளேயே போட்டி!

...தலைவர் வேட்பாளர்க...ப்பட்ட இருவருமே தமிழரசு கட்சி உறுப்பினர்களே. இந்த நிலையில் ஏற்கெனவே தயாரான நிலையில் இருந்த வாக்குப்பெட்டி, வாக்கு சீட்டு ஆகியன அவை செயலாளரினால் சபா மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்டது. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளை அளித்தனர். வாக்கெண்ணும் பணிகளை யார் மேற்கொள்வது என்பதிலும் உறுப்பினர்களிடையே கருத்து மோதல் இடம்பெற்றிருந்தது.

இறுதியில் வாக்கெண்ணும் கண்காணிப்பாளர்களாக அமைச்சர் டெனீஸ்வரன், எதிர்க்கட்சி உறுப்பினர் ஜவாகிர் ஆகியோர் நியமிக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் செயலாளரினால் வாக்கு எண்ணப்பட்டது. அனந்தி பதின்மூன்று வாக்குகளை பெற்றார். கமலேஸ்வரன் பதினெட்டு வாக்குகளை பெற்று பிரதி அவைத்தலைவராக தெரிவானார். இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் நடுநிலைமை வகித்ததாக அறிவித்தார். இவ்வாக்கெடுப்பில் முதலமைச்சர் உட்பட 6 பேர் பங்கேற்கவில்லை.

**வெற்றியும் அல்ல தோல்வியும் அல்ல**

இந்த தேர்தலில் போட்டியிட்ட இருவருமே கிட்டத்தட்ட சரிக்கு சமமான வாக்குகளை பெற்றுள்ளனர். இதனை வெற்றி தோல்வியாக கருத முடியாது. எனினும் இருவர் பக்கமும் உறுப்பினர்கள் இருப்பதனால் எதிர்காலத்தில் பிரிந்து நிற்பதற்கான சாத்தியங்கள் உண்டு. எனவே இந்த வாக்கெடுப்பு தான் கடைசியும் முதலுமான வாக்கெடுப்பாக இருக்க வேண்டும் என அமைச்சர் ஐங்கரநேசன் கூறினார். இதன்போது, இந்த வாக்கெடுப்பு தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பிளவின் ஆரம்பம் என உறுப்பினர் விந்தன் கூறி வைத்தார்.

இவ்வேளையில் கருத்துரைத்த அவைத்தலைவர், தான் இன்றைய தினம் (நேற்று) பதவி விலகும் எண்ணத்துடனேயே வந்ததாக தன்னுடைய கவலைகளை சபையில் கூறினார். பின்னர் புதிதாக தெரிவு செய்யப்பட்ட பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் அவைத்தலைவர் முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியை பொறுப்பேற்று கொண்டார். தொடர்ந்து அவரது உரை இடம்பெற்று. அதன் பின்னர் மதிய உணவு இடைவேளைக்கு சபை கலைந்து சென்றது. (சே-4)

## வற்வரி விலக்களிக்க...

ளால் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் 11 வீதமாக இருந்த வற்வரி 15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 80 இற்கும் அதிகமான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அதிகரிக்கப்பட்ட வற்வரியிலிருந்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி வரி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள பொருட்களின் விபரம் வருமாறு,

கோதுமை, கோதுமை மா, அரிசி, சீனி, பருப்பு, கருவாடு, ரின் மீன், மாசி, மசாலா தூள் வகைகள், பாண், பால், தேயிலை, இறப்பர், தேங்காய், தேங்காய் எண்ணெய், தேங்காய் பால், முட்டை, இறால், பழ வகை, காய்கறிகள், உருளைக்கிழங்கு, நெத்தலிக்கருவாடு, சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம், வெள்ளைப்பூடு, பயறு, மிளகாய், கௌப்பி, கடலை, உழுந்து, கொத்தமல்லி, நிலக்கடலை, உரவகைகள், மருந்துகள், மருந்து தயாரிப்பு இயந்திரங்கள், மருந்து தயாரிப்பு உபகரணங்கள், மருந்துப் பொதியிடல் உபகரணங்கள், ஆயுர்வேத மருந்து தயாரிப்புகள், சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல், காதுகேளாதோர் கருவி, கண் தெரியாதவர்களுக்கான வெள்ளைப் பிரம்பு, பிரெயில் இயந்திரங்கள், பிரெயில் காகிதம், மூக்குக்கண்ணாடி, மூக்குக்கண்ணாடி தயாரிப்பு பொருட்கள், வெளிநோயாளர் சேவைகள், இரத்த மாற்று சிகிச்சை, நோய்களை கண்டறியும் சோதனைகள், அறுவை சிகிச்சை சேவைகள், டீசல், போக்குவரத்து சேவைகள், மண்ணெண்ணெய், பெற்றோல், விமான எரிபொருள், உற்பத்தி வரி அறவிடப்படும் வாகனங்கள், பவுசர், விவசாய விதைகள், விவசாய செடிகள், விவசாய இயந்திரங்கள், டிராக்டர்கள், நெல் அரைக்கும் இயந்திரங்கள், பேக்கரி தயாரிப்பு இயந்திரங்கள், பால் பதப்படுத்தும் இயந்திரங்கள், மீன்பிடி உபகரணங்கள், கிறீன்ஹவுஸ், கட்டுமான உபகரணங்கள், மின்சாரம், சூரிய மின் உற்பத்தி உபகரணங்கள், மின்வலு சேமிப்பு விளக்கு, மின்வலு சேமிப்பு விளக்குக்கான உற்பத்தி பொருட்கள், கல்வி சேவைகள், நூலக சேவைகள், கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், கணினி மென்பொருள், அச்சிடப்பட்ட புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள், ஆயுள் காப்புறுதி, கையடக்க தொலைபேசிகள், இரத்தினக்கல், முத்து, வைரம், தங்கம், பிளாட்டினம், வீட்டுக்கான நிலம் விற்பனை ஆகிய பொருட்களிற்கே வற்வரி விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. (சே-11)

## அர்ஜுன் மகேந்திரன்...

நேற்று பிற்பகல் 3.12 மணியளவில் சிங்கப்பூர் செல்லும் விமானத்தில் அவர் புறப்பட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோப் குழுவின் தலைவரும் ஜே.வி.பி இன் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி சமர்ப்பிக்கவுள்ள அறிக்கைக்கு மாற்றாக மற்றுமொரு அறிக்கையை சமர்ப்பிக்க ஐக்கிய தேசிய கட்சி முன்னர் திட்டமிட்டிருந்தது. எனினும் பிணை முறிப் பத்திர மோசடியில் இருந்து அர்ஜுன மகேந்திரனை பாதுகாக்கும் வகையிலேயே ஐக்கிய தேசிய கட்சி வேறு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க முயல்வதாக சுனில் ஹந்துன்நெத்தி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் ஏகமனதான கோப் அறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என கோப் குழுவிலுள்ள ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே அர்ஜுன மகேந்திரன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சே-11)

## மூத்நரிப்புத்துறை...

எயைச் சேர்ந்த 4 மீனவர்களும், நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த 6 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபத்துறை மீனவர்களின் 3 படகுகளும், வங்காலை மீனவரின் ஒரு படகும், நறுவிலிக்குளம் மீனவர்களின் 9 படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீனவர்களின் கைது தொடர்பாக மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மெராண்டாவை தொடர்பு கொண்டு கேட்ட போது.

கடற்படையினர் தன்னிச்சையாக செயற்பட்டு மீனவர்களை கைது செய்கின்றனர். மீனவர்கள் கடற்தொழில் திணைக்களத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீனவர்களின் காப்புறுதி ஆவணங்களை பரிசோதனை செய்வது கடற்படையினரின் வேலை இல்லை. தொடர்ந்தும் கடற்படையினர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பாக மீனவர்கள் எங்களிடம் முறையிட்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் எங்களிடம் ஒப்படைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (சே-9)

# ரவிராஜ் படுகொலை வழக்கு ஜூரிகள் சபை முன் விசாரணை

### கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை தொடர்பான வழக்கு விசாரணையை விசேட ஜூரிகள் சபை முன்பாக முன்னெடுப்பதற்கான அனுமதியை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

குறைந்தபட்சமாக பட்டதாரிகள் பங்கேற்புடன் ஜூரிகள் சபைக்கு முன்பாக இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு கொழும்பு மேல நீதிமன்ற நீதவான் மனிலால் வைதத்தியதிலக அனுமதியளித்தார்.

கடந்த 10 வருடங்களாக இடம் பெற்று வருகின்ற முன்னாள் எம்.பி ரவிராஜ் படுகொலை வழக்கு நேற்றைய தினமும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பிலான எழுத்துமூல வாதங்கள் கடந்த விசாரணையின்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அரச சட்டவாதி தரப்பிலும் கடந்த தவணையில் வாதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த வழக்கை ஜூரிகள் சபையிலா அல்லது தனி நீதிபதி முன்னிலையிலா விசாரணை செய்வது தொடர்பான தீர்மானம் நேற்று அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே ஜூரிகள் சபை முன்பான விசாரணைக்கான அனுமதியை நீதிமன்றம் அளித்துள்ளது.

இதேவேளை இந்த வழக்கு தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் முன்நிறுத்தப்பட்டுள்ளதோடு மேலும் மூன்று சந்தேக நபர்கள் இல்லாமலேயே ஜூரிகள் சபை முன்பாக வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது. (செ)

## மனித எலும்புக்கூடு மீட்பு

(பரந்தன்)

கிளிநொச்சி உருத்திரபுரம் நீவில் காட்டுப் பகுதிக்குள் மனித எலும்புக் கூடு ஒன்று நேற்று வியாழக்கிழமை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.



குறித்த காட்டுப்பகுதிக்குள் சென்ற சில பொது மக்களால் இவ் எலும்புக்கூடு அவதானிக்கப்பட்டு அவர்களால் பொலிஸ் அவசர இலக்கமான 119 இற்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி பொலிஸார் சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மண்டையோடு மற்றும் எலும்புகள் மாத்திரமே எஞ்சியுள்ள நிலையில் மீட்கப்பட்ட உடலம் தொடர்பில் அது தற்கொலையா அல்லது கொலையா என்பது குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு சுமார் இரண்டு மாதங் களுக்கு முன்னர் இடம்பெற்ற மரணமாக இது இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (செ-312)

## இராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் உபய நியமனம்



(கொழும்பு)

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் உபய மெடவெல நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை, இலங்கை இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையின் பேரில் பாதுகாப்பு அமைச்சினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸும், பிரதித் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் மேதவ பீரிஸ் ராவும் ஓய்வு பெற்றதை அடுத்தே, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவை அடுத்து, மேஜர் ஜெனரல் உபய மெடவெல, மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக, மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, மேஜர் ஜெனரல் உபுல் விதானகே, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஆகியோர் மூப்பு வரிசையில் உள்ளனர்.

இவர்களில் மேஜர் ஜெனரல் உபய மெடவெல வரும் டிசெம்பரிலும், மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக அடுத்த ஆண்டு மார்ச் மாதமும், 55 வயதை எட்டுவதால், சேவை நீடிப்பு வழங்கப்படாது போனால் இவர்கள் ஓய்வுபெற நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## தந்தை, மகன் மீதும் நேற்றிரவு வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நான்கு பேர் கொண்ட குழு வாளால் வெட்டியதில் தந்தையும் மகனும் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் யாழ்.சங்குவேலி வயல்வெளிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பண்டத்தரிப்பை சேர்ந்த தந்தையான ஆசீர்வாதம் சதீஸ் (வயது 53) மற்றும் அவரது மகனான சதீஸ் ரெஜினோல்ட் (வயது 24) ஆகிய இருவருமே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது, சங்குவேலி வயல் பகுதியூடாக தந்தையும் மகனும் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது வயல்வெளிப்பகுதியில் இருந்து அவர்களை வழிமறித்த இனந்தெரியாத 4 பேர் அவர்கள் இருவரையும் சரமாரியாக வாளால் வெட்டியதுடன் அவர்களிடமிருந்து பணம் மற்றும் பெறுமதியான தொலைபேசியையும் அபகரித்துக் கொண்டு இரு மோட்டார் சைக்கிள்களில் தப்பிச்சென்றுள்ளனர். இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாட்டினை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

# பிரதி அவைத்தலை...



இதன் போதே நடைபெற்ற வாக்கெடுப்பி லேயே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவில் தமிழரசு கட்சியை பிரதி நிதித்துவப்படுத்தும் இவர் பிரதி அவைத்தலை வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் அவைத்தலைவர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு பிரதி அவைத்தலைவராக இவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னர் பிரதி அவைத்தலைவராக இருந்த அன்ரனி ஜெயநாதன் அண்மையில் மாரடைப்பினால் உயிரிழந்ததனை அடுத்தே, வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பதினெட்டு வாக்குகள் பெற்று ஐந்து வாக்குகள் வித்தியாசத்தில் கமலேஸ்வரன் தெரிவாகியுள்ளார். (செ-4)

# அவைத்தலைவர்...

வடக்கு மாகாண சபையின் அறுபத்தி நானகாவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே என்றுமில்லாதவாறு ஆளுங்கட்சியினர் தமக்குள்ளே அடிபட்டு கொண்டனர். எதிர்க்கட்சியினர் அமைதியாக இருந்து வேடிக்கை பார்த்துகொண்டு இருந்தனர். அவ்வப்போது சண்டை போட வேண்டாம் எனஆளுங்கட்சிக்கு அறிவுரையும் வழங்கினார்கள்.

**ஆரம்பம**

முன்னதாக சபை அறிவிப்பை மேற்கொண்ட அவைத்தலைவர். இன்றைய தினம் பிரதி அவைத்தலைவர் தெரிவு இடம்பெறவுள்ளதாக அறிவிப்பு செய்தார். எனினும் முதலமைச்சரின் கோரிக்கையை சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள் இந்த தெரிவை அடுத்த மாகாண சபைக்கு அமர்விற்கு ஒத்திவைக்குமாறும் கோரினார்கள். இதன்போது கருத்து தெரிவித்த பதில் முதலமைச்சரும் கல்வி அமைச்சருமான குருகுலராஜா, குறித்த தெரிவினை அடுத்த அமர்வில் மேற்கொள்ளுமாறு கூறினார்.

எனினும் இதனை ஏற்றுக்கொள்ளாத உறுப்பினர் சயந்தன், முதலமைச்சர் இங்கு இல்லை என்ற அடிப்படையில் குறித்த தெரிவினை ஒத்திவைக்க முடியாது. மாறாக முதலமைச்சர் சபையில் இல்லாமை ஒரு வாக்கு குறையும் என்ற அடிப்படையில் கோர முடியும் என கூறினார். எனினும் முக்கியமான விடயங்கள் வருகின்ற போது முதலமைச்சருடன் கலந்துரையாடி முடிவெடுப்பது அவசியமாகும். எனினும் முதலமைச்சர் இங்கு இல்லாத நிலையில் போட்டிகள் பொறாமைகளுக்காக அவசர அவசரமாக சிறுமைத்தனமாக செயற்பட கூடாது என உறுப்பினர் சர்வேஸ்வரன் கூறினார்.

**சீ.வீ.கேக்கு ஏதும் நடைபெற்றால்?**

இதனை மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் தற்போது சபையை நடத்தி வரும் அவைத்தலைவர் சிவஞானத்திற்கு திடீரென ஏதும் நடைபெற்றால் யார் சபையை நடத்தி செல்வது? சபை ஒழுங்குகளை யார் முன்னெடுப்பது? என கேள்வி எழுப்பி இன்றைய தினம் (நேற்று) புதிய பிரதி அவைத்தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என கூறினார். எனினும் இதனை தொடர்ந்து எதிர்த்துவந்த உறுப்பினர்களான விந்தன், சர்வேஸ்வரன் ஆகியோர் இந்த தெரிவை இன்றைய தினம் மேற்கொள்வதா இல்லையா என வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரினார்கள்.

இதன்போது கருத்து தெரிவித்த விந்தன் கனகரத்தினம், வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு கடந்த இரண்டு வருடமாக ஒற்றுமையுடன் இயங்கி வருகின்றது. எத்தனையோ பிரேரணைகள் இதுவரை நிறைவேற்றியுள்ளோம் ஆனால் ஒன்று கூட வாக்கெடுப்புக்கு செல்லவில்லை. ஆனால் இப்போது முந்தியடித்து கொண்டு பிரதி அவைத்தலைவர் தெரிவினை வாக்கெடுப்பு மூலம் மேற்கொள்ள கோருவதற்கான காரணம் என்ன? என கேள்வியெழுப்பினார்.

**பட்ஜெட் தோற்கடிக்கப்படும்**

மேலும் உறுப்பினர்கள் அனைவரது சம்மதம் இன்றியும் பிரதி அவைத்தலைவர் தெரிவு வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றால் எதிர்வரும் காலங்களில் வடக்கு மாகாண சபையின் பட்ஜெட் உட்பட அனைத்து பிரேரணைகளும் எதிர்க்கப்படும், தோற்கடிக்கப்படலாம். மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் பல அணிகளாக பிரிந்து செயற்படும் நிலையும் இதன் மூலம் ஏற்படுத்தப்பட வாய்ப்புண்டு ஆகவே இந்த ஆபத்தான நிலையை தவிர்ப்பதற்கு அனைவரது கோரிக்கைகளை செவிமடுத்து அடுத்த அமர்விற்கு,பிரதி அவைத்தலைவர் தெரிவை மேற்கொள்ள வேண்டும் எனவும் விந்தன் வலியுறுத்தினார்.

இதன்போது உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக உரக்கக் கதைத்தமையால் மொழிபெயர்ப்பாளர்கள் திணறியதோடு, பார்வையாளர் அரங்கில் இருந்தவர்களும் தமது காதுகளை பொத்திக்கொண்டனர். இவ்வாறு உறுப்பினர்கள்தம்முடைய கருத்துக்களை ஒருவருக்கு ஒருவர் சந்தர்ப்பம் வழங்காமல் அனைவரும் கோரமாக கத்தி கத்தி கதைத்தமையால் சபை அமர்வே அமர்க்களமானது.

**வாராந்த சந்தையே நேற்று கூடியது!**

இதன் போது எழுந்த மீன்பிடி அமைச்சர் டெனிஸ்வரன். இன்றைய அமர்வு சபை போன்று நடைபெறவில்லை, வாராந்த சந்தை கூடுவது போன்றே நடைபெற்று வருகின்றது. கௌரவமான சபை என கூறிக்கொண்டு இவ்வாறு அநாகரிகமாக உறுப்பினர்கள் நடந்து கொள்வது வருத்தம் அளிக்கின்றது. சிங்களவன் தமிழர்களுக்கு தனிநாட்டினை தந்தால் எமக்குள்ளேயே நாம் அடிபட்டு செத்து விடுவோம் என டெனிஸ்வரன் மிக கவலையடைந்தார்.

அறுபத்தி மூன்று மாகாண சபை அமர்வுகள் இதுவரை நடைபெற்று முடிந்துள்ளது. இவை அனைத்தும் சபை ஒழுங்குகளுக்கு அமையவே நடைபெற்றன. இந்த நிலையில் இன்றைய அமர்வும் அவ்வாறே நடைபெற வேண்டும். ஒழுங்கு பத்திரத்தில் பிரதி அவைத்தலைவர் தெரிவுஉள்ளதுஎன கூறப்பட்டுள்ளது. அதே போன்று இன்றும் (நேற்று) பிரதி அவைத்தலைவர் தெரிவு இடம்பெற வேண்டும். மேலும் அறுபத்திமூன்று அமர்வுகள் எவ்வாறு அனைவரது ஒற்றுமையுடன் நடத்தப்பட்டதோ அதே போன்றும் இந்த அமர்வு நடைபெற வேண்டும்என உறுப்பினர் ஆனோல்ட் கூறினார்.

**கல்லறையில் தான் பிரதி அவைத் தலைவர் பதவி!**

பிரதி அவைத்தலைவராக இருந்த அமரர் அன்ரனி ஜெயநாதன் ஒருமுறைதான் அதுவும் இரண்டு மணித்தியாலங்களே பிரதி அவைத்தலைவராக இந்த சபையில் இருந்து அவையை நடத்தியிருந்தார். இதற்கு காரணம் அவைத்தலைவர் அவரை சபை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. இப்போது அவர் இறந்த பின்னர்தான் அவரது கல்லறையில் பிரதி அவைத்தலைவர் என்ற பதவி பொறிக்கப்பட்டுள்ளது என உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கூறினார். இவ்வாறான ஒரு பதவிக்கு ஏன் அனைவரும் அடிபட வேண்டும என அவைத்தலைவருக்கு மறைமுக குத்து ஒன்றை போட்டார் உறுப்பினர் சயந்தன்.

இதன் போது எழுந்த உறுப்பினர் சிவநேசன் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆளுங்கட்சி பிரதிநிதிகளாக நானும் ரவிகரனும் தான் உளளோம். ஏனைய ஆளுங்கட்சி உறுப்பினர்களை முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதிநிதிகளாக நாம் கருதவில்லை என கூறி, பிரதி அவைத்தலைவர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சொந்தமானது என்ற வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்மிருவரிடமும் கலந்தாலோசிக்கப்படவில்லை என தனது ஆதங்கத்தை சிவநேசன் கூற, அதைப்போய் கட்சியிடம் கேட்குமாறு அவைத தலைவர் சிவஞானம் சடாரென்று பதில் கூறினார்.

**முதலமைச்சர் என்னை குழப்புகின்றார்!**

பிரதி அவைத்தலைவர் தெரிவு தொடர்பில முதலமைச்சரின் கருத்தை கேட்டு செயற்பட வேண்டும். அவ்வாறில்லாமல் அவரது கோரிக்கைக்கு எதிராக இவ்வாறு அடிபட்டு கொண்டிருப்பது கேவலமாக இருக்கின்றது என உறுப்பினர் தியாகராசா கூறினார். எனினும் தன்னை குழப்புவதற்காவே குறித்த தெரிவினை ஒத்திவைக்குமாறு முதலமைச்சர் கடிதம் மூலம் கோரியுள்ளதாக தனது உளக்கிடக்கையை கொட்டினார் அவைத்தலைவர் சிவஞானம்.

இங்கே இப்போது அசிங்கமான அமர்வு ஒன்று நடைபெற்று கொண்டு இருக்கின்றது. நாங்கள் ஆரம்பம் முதலே இப்போது நடைபெற்று கொண்டிருப்பவை பற்றி கூறியிருந்தோம். ஆனால் அதனை எமது சக உறுப்பினர்கள் செவி மடுக்கவில்லை. அப்போது நாம் கூறியவற்றை கேட்டிருந்தால் இந்தளவிற்கு அடிபாடு நடைபெற்றிருக்காது. இப்போது நாம் ஆரம்பத்தில் கூறிய விடயங்களுக்காக இப்போது அடிபட்டு கொண்டு இருக்கின்றனர். என எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கூறினார்.

**எதிர்கால சந்ததிக்கான சபையை குழப்பாதீர்கள்.**

அத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்சி பிரச்சினையே இங்கு விவாதிக்கப்படுகின்றது. வடக்கு மாகாண சபை தேர்தல் இடம் பெற்று அதன் பின்னர் நடைபெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வுகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் முன்னாள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதிலிருந்து இந்த பிரச்சினை ஆரம்பித்திருந்தது. உயிரிழந்த பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதனின் அஞ்சலி கூட்டத்திலும் கட்சி பிரச்சினையே பேசப்பட்டது என தவநாதன் கூறினார்.இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்களும் தவநாதனுக்கு எதிராக கூச்சலிட்டனர். மேலும் உறுப்பினர் சிவாஜிலிங்கம் குறித்த குற்றச்சாட்டை மறுத்திருந்தார்.

உயிரிழந்த பிரதி அவைத்தலைவர் மிகவும் அமைதியான நல்ல மனிதர். அவருடைய பதவியை பெறுவதற்காக இவ்வாறு அடிபடுவது அவருடைய ஆத்மா சாந்தியடையாது. இந்த தெரிவு அமைதியாக எடுத்தால்தான் அவருடைய ஆத்மா சாந்தியடையும் என உறுப்பினர் லிங்கநாதன் கூறினார். எனினும் முடிவுகள் எவையும் இறுதிவரை ஒற்றுமையுடன் எடுக்கப்படவில்லை. வாக்கெடுப்பா? அல்லது தெரிவை ஒத்திவைப்பதா? என்ற குழப்பம் தொடர்ந்து செல்ல நல்லெண்ண அடிப்படையிலும், முதலமைச்சருக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த தெரிவை பிற்போடுவது நல்லது என மீண்டும் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் கூறினார்.

**மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும்.**

இதுவரை மௌனம் காத்த உறுப்பினர் ரவிகரன், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு

23 ஆம் பக்கம் பார்க்க...

# குப்பி...

குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா மரணவிசாரணையினை மேற்கொண்டதுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சடலத்தை ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணையினை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

தீபாவளி கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும்
தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்



DIWALI SPECIAL OFFER
Buy 1 Get 1 FREE
05.11.2016 வரை
Delivery | Take away | Dine in
எந்தவொரு Large Pizza வாங்கும் போதும்
Small Pizza ஒன்று இலவசம்
11 ELEVEN PIZZA
128, Palaly Road, Jaffna.
(Next to Parameswara Junction)
Call
021 221 6700
077 744 4225

**பணியாளர் தேவை**

பக்க வடிவமைப்பாளர் Photoshop, CoralDraw, Indesign, அச்சு இயந்திர இயக்குனர் (Kora Kord), புத்தகம் கட்டுனர் (Binder) அனுபவமுள்ளவர்கள் தங்களது சுயவிபரங்களுடன் திங்கள், செவ்வாய் 2.30 - 4.30 வரை நேரில் சமுகமளிக்கவும்.

ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்
இல.555 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : T.P :0214545044

**அமெரிக்க லொத்தர் விசா**

2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
அரிய வாய்ப்பு - சில தினங்களுக்கு மட்டுமே! 0768226230
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்
சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 18 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|
| 0768226241 | 0768226240 | 0776699892 | 0768226237 | 0776697960 |

மேலும் தகவல்களுக்கு--> www.facebook.com/v2tamil

**பதவி வெற்றிடங்கள்**
**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அலுவலக செய்தியாளர்கள் (உள்ளகம், வெளியகம்- இருபாலாரும்)
- பெண்கள் தமிழ் தட்டச்சு மற்றும் பக்க அமைப்பாளர் (இருபாலாரும்)
- வெப் மெசின் பயிலுநர் (ஆண்கள்-இரவுக் கடமை)

தகைமை

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- வயது 25இக்கு மேல்

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை;

பொதுமுகாமையாளர்,
வலம்புரி
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு 31.10.2016இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.